வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு வார மலர்

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 06 | 31.08.2025 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 243 | பக்கங்கள் : 16

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06.
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria றியா பணப்பரிமாற்றம்
Western Union வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு சர்வதேச நீதி கோரி உறவினர்கள் திரள்வு!

## வடக்கு - கிழக்கில் நேற்று கவனவீர்ப்பு போராட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 31

**சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்குச் சர்வதேச நீதி கோரி நேற்று வடக்கு, கிழக்கில் கவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.**

இந்நிலையில், வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் பெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். கிட்டு பூங்கா முன்றிலில் நேற்று காலை 10 மணியளவில் ஒன்று திரண்ட போராட்டக்காரர்கள், அங்கிருந்து பேரணியாக மனிதப் புதைகுழி காணப்படும் செம்மணிப் பகுதிக்கு அண்மையாகச் சென்று நீதி கோரி கோஷமிட்டனர்.

"தமிழின அழிப்புக்கும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமைக்கும், போர்க்குற்றங்கள் மற்றும் மனிதப் புதைகுழிகளுக்கும் சர்வதேச விசாரணை

15



## உள்நாட்டு விசாரணை வேண்டாம் சர்வதேச நீதியே எமக்கு வேண்டும்!

### வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கம் பகிரங்கக் கோரிக்கை

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஒக. 31

உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை முற்றாக நிராகரித்து சர்வதேச நீதிப் பொறிமுறையே வேண்டும் என்று வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தின் நிறைவில் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் ஐ.நா மனித உரிமைகள் பேரவை ஆணையாளருக்கான மகஜர்

15

## காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்; படைகளுக்கு எதிராக 3,742 முறைப்பாடு

கொழும்பு, ஒக. 31

இதுவரையான காலப்பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் 16,966 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இலங்கையின் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு எதிராக இதுவரை 3,742 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தினால் இதுவரை 746 முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

### சித்துப்பாத்தி மனித புதைகுழி:

## நேற்றும் 10 என்புக்கூட்டு தொகுதிகள் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 31

செம்மணி - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் நேற்று மேலும் 10 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சித்துப்பாத்தி மனித புதைகுழியில் இரண்டாம் கட்டத்தின் மூன்றாவது அமர்வு அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

நேற்று 37 ஆவது நாளாக அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

நேற்று புதிதாக 10 என்புக்கூட்டுத் தொகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் நேற்று முன் தினம் 08 என்புக்கூட்டுத் தொகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டன. (அ)

## யாழில் இளம் குடும்பஸ்தர் நேற்று திடீரென உயிரிழப்பு!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஒக. 31

இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று திடீரென உயிரிழந் துள்ளார். வட்டுக்கோட்டை - கலட்டி பகுதியைச் சேர்ந்த நடராசா ஜெயக்குமார் (வயது 45) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த குடும்பஸ்தர் நேற்று காலை உடல் சுகயீனம் காரணமாக படுத்திருந்தார். இந்நிலையில் அவர் அசைவற்று காணப்பட்டதால் குடும்பத்தினர் அவரை வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். இருப்பினும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர் தெரிவித்தார்.

15



## பிரிட்டன் பிரதமர் அலுவலகம் முன் நேற்று தமிழர் கண்டன போராட்டம்

லண்டன், ஒக. 31

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களுக்காக நீதி கோரியும் செம்மணி படுகொலைகளுக்கு நீதி வேண்டியும் நேற்று லண்டனில் பிரித்தானிய பிரதமர் அலுவலகம் முன்பாக கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இலங்கை தூதரகத்தில் இருந்து பிரித்தானிய

15

## ஜெனீவா தீர்மானங்களுக்கு எதிராக கையெழுத்து சேகரிப்பு

கொழும்பு, ஒக. 31

இலங்கைக்கு எதிராக அடுத்த மாதம் 8 ஆம் திகதி முன்வைக்கப்படவுள்ள ஜெனீவா தீர்மானங்களுக்கு எதிராக நாடு தழுவிய அளவில் பொது கையொப்ப சேகரிப்பு பிரசாரத்தைத் தொடங்க இரண்டாம் தலைமுறை போர் வீரர் பெருஞ்சுவர் இயக்கம் முடிவு செய்துள்ளது.

15

## காணாமல் ஆக்கப்பட்டோர்: கரிசனை கொண்டுள்ள அரசு

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க

கொழும்பு, ஒக. 31

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு உரிய தீர்வை பெற்றுக் கொடுப்பதற்காக காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்துக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்குவதற்கு தற்போதைய அரசாங்கம் தயாராக உள்ளதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

15

## சஜித்துடன் முதலில் பேசிய ரணில்!

கொழும்பு, ஒக. 31

முன்னாள் ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்க, பிணை வழங்கப்பட்ட பின்னர், தேசிய மருத்துவமனையில் இருந்து முதலில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவுடன் தொலைபேசியில் பேசியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

15

## மாகாணத் தேர்தல் குறித்து அரசின் நிலைப்பாடு என்ன?

### கேள்வி எழுப்புகிறது கபே அமைப்பு

கொழும்பு, ஒக. 31

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அரசாங்கம் உட்பட சகல அரசியல் கட்சிகளும் வெகு விரைவில் தத்தமது நிலைப்பாடுகளை அறிவிக்க வேண்டும் என சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் இயக்கம் (கபே அமைப்பு)

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் காணியை கோரிய விமானப் படை

## முல்லை. மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு மறுப்பு

முல்லைத்தீவு, ஒக. 31

முல்லைத்தீவு - கேப்பாப்புலவில் உள்ள 0. 5 ஹெக்டயர் மக்களின் விவசாயக்காணிகளை தமது தேவைக்கு வழங்குமாறு கேப்பாப்புலவு விமானப்படையினர் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவில் கோரியிருந்தனர். இதற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு மறுப்புத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கேப்பாப்புலவில் ஏற்கனவே படையினரால் மக்களின் காணிகள் பல அபகரிக்கப்பட்டுள்ளமையை சுட்டிக்காட்டிய வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், விமானப்படையினரின் இந்தக் கோரிக்கைக்கு தமது கடுமையான எதிர்ப்பையும் வெளியிட்டிருந்தார்.

இதனால், விமானப்படையினருக்கு காணி வழங்குவதில்லை என வெள்ளிக்கிழமை நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

இது குறித்து ரவிகரன் எம்.பி. தெரிவிக்கையில்,

"படையினரால் ஏற்கனவே ஆக்கிரமிக்கப்பட்டிருந்த குறித்த காணி விடுவிக்கப்பட்ட நிலையில், அக்காணியில் மக்கள் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். அந்தக்காணியை விமானப்படை தமக்குத்தருமாறு மீண்டும் கோருவது பொருத்தமற்ற செயல்பாடாகும்.

அத்தோடு இன்னும் 190 ஏக்கர் அளவில் மக்களுக்குரிய காணிகள் கேப்பாப்புலவில் விடுவிக்கப்பட வேண்டியுள்ளது. இந்த நிலையில் தமது காணிகளை விடுவிக்க வேண்டுமென கேப்பாப்புலவு மக்கள் தொடர்ந்து போராடியும், கோரிக்கைகளை முன்வைத்தும் வருகின்றனர்.

இவ்வாறிருக்க மீண்டு விமானப்படையினர் விடுவிக்கப்பட்ட மக்களின் காணியை மீண்டும் கோருவது வேடிக்கையாகவுள்ளது.

யுத்தம் மௌனிக்கப்பட்டு ஒன்றரைத் தசாப்தகாலத்துக்கு மேலாகியுள்ள நிலையில் மக்களின் காணிகளை அபகரித்து, இங்கிருந்துகொண்டு விமானப்படையினர் யாருடன் யுத்தம் செய்யப்போகின்றனர்?" - என்றும் கேள்வியெழுப்பினார். (எ)



# வவுனியா வடக்கு ஓமந்தை கோட்ட முன்பள்ளி சிறார்களின் திறனாய்வு

வவுனியா, ஒக. 31

வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் ஓமந்தை கோட்ட முன்பள்ளி சிறார்களின் திறனாய்வு நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

வவுனியா, புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டு மைதானத்தில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

இதில், 43 முன்பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 400 மழலைகள் கலந்து கொண்டு தமது திறன்களை வெளிப்படுத்தினர்.

இதேவேளை, வெற்றிபெற்ற மழலைகளுக்கு வெற்றிக்கேடயங்களையும் சான்றிதழ்களையும் விருந்தினர்கள் வழங்கி னர்.

ஓமந்தை கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் காசிநாதன் விஜயகுமாரி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உதவிப் பிரதேச செயலாளர் திருமதி உமாநந்தினி புவனராஜன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைத் தவிசாளர் பா. பாலேந்திரன் மற்றும் பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரியர்கள், முன்பள்ளி சிறார்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-10)

# சிறுவர்களை பாதுகாப்போம் வவுனியாவில் விசேட பேரணி

வவுனியா, ஒக. 31

சிறுவர்களை பாதுகாப்போம், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்க ஒன்றாக திகழ்வோம் எனும் தொனிப்பொருளில் வவுனியாவில் விசேட பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நெகோமியா அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டின் கீழ் இலங்கை திருச்சபை திருக்கலவன் பாடசாலைக்கருகில் இருந்து ஆரம்பமான குறித்த பேரணியானது ஏ-9 வீதியின் ஊடாக வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் நிறைவடைந்தது.

பொதுமக்கள், சிறார்கள் எனப் பலரும் கலந்து கொண்ட இப்பேரணியில், நாம் மென்மையானவர்கள், எம்மீது வன்மத்தை தீர்க்காதீர்கள்,



என்னை மற்றவர்களின் திறமைகளோடு ஒப்பிடாதீர்கள் போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறு பேரணியில் ஈடுபட்டனர். (எ-10)

# பருத்தித்துறை. பிரதேச சபை எல்லைக்குள் பொலித்தீன் பாவனைக்கு தடை

யாழ்ப்பாணம், ஒக. 31

பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குள் மூன்று மாதங்களுக்குள் பொலித்தீன் பாவனையை முற்றாக கட்டுப்படுத்துவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் தவிசாளர் எஸ். யுகதீஸ் தலைமையில் நடைபெற்றது.

இதில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அந்தவகையில் செப்ரெம்பர் மாதம் பனை விதை நடுகை மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டு 10,000 பனை விதைகள் நாட்டுவதென்று தீர்மானிக்கப்பட்டது.

சபை எல்லைக்குள் எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் பொலித்தீன் பாவனையை முற்றாக கட்டுப்படுத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சபை வீதிகளை ஊறிக்களி மண் பயன்படுத்தி அமைப்பதென்றும்

உக்காத கழிவுப் பொருட்களை பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட இடத்தில் கொட்டுவதற்கு அனுமதி கோரப்பட்ட நிலையில் மூன்று மாத காலங்களுக்கு சுழற்சி முறையில் அனுமதி கொடுப்பது, ஓர் உழவு இயந்திர பெட்டி குப்பைக்கு 5,000 ரூபாய் அறவிடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

(எ-02-05)

# பாரம்பரிய மரபுரிமைச் சின்னமான சுமைதாங்கி இடித்து அகற்றப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக. 31

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட நுணாவில் கிழக்கு கல்வயல் வீதியில் அமைந்திருந்த பாரம்பரிய மரபுரிமைச் சின்னமான சுமைதாங்கி தனியார் ஒருவரால் முற்றாக இடித்து அகற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அப்பகுதி மக்கள் சாவகச் சேரி நகர சபை உபதவிசாளர் ஞா. கிஷோருக்கு அறிவித்ததையடுத்து குறித்த இடத்துக்குச் சென்று நிலைமைகள்



தொடர்பில் அவதானித்ததோடு, சுமைதாங்கியை இடித்தவர்களை வைத்தே மீண்டும் அமைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், நகராட்சி மன்ற எல்லைக்குட் பட்ட பாரம்பரிய மரபுரிமைச் சின்னங்களை அடையாளப்படுத்தி தொல்பொருள் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்படாத சின்னங்களை நகர சபை மூலம் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உறுதியளித்தார். (எ-05)

# தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் இளையோர் இடையே சதுரங்க போட்டி



யாழ்ப்பாணம், ஒக. 31

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வருடம் தோறும் சதுரங்க போட்டியை நடத்தி வருகின்றது.

அந்த வகையில் யாழ். மாவட்ட இளைஞர் சம்மேளன இளைஞர்களுக்கான சதுரங்க போட்டி நேற்று தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது

இந்த சுற்றுப் போட்டியில் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச சம்மேளனங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சதுரங்க விளையாட்டு வீர வீராங்கனைகள் மிகுந்த ஆர்வத்துடன் பங்குபற்றினர். இதில், மாவட்ட இளைஞர் சம்மேளன உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-05)

### முல்லைத்தீவு நகர மையத்தில்

# பால் பொருட்கள் உள்ளூர் உற்பத்தி முல்கோ விற்பனை நிலையம் திறப்பு

முல்லைத்தீவு, ஒக. 31

முல்லைத்தீவு மாவட்டத்தின் நகர மைய சுற்றுவட்டத்துக்கு அருகாமையில் பால் பொருட்கள் உள்ளூர் உற்பத்தி 'முல்கோ' விற்பனை நிலையம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவரும் கூட்டுறவு பிரதியமைச்சருமான உபாலி சமரசிங்க மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் இணைந்து இந்த நிலையத்தை திறந்து வைத்தனர்.

குறித்த 'முல்கோ' விற்பனை நிலையமானது கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்தால் நடத்தப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ. உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான க. திலகநாதன், ம. ஜெகதீஸ்வரன், து. ரவிகரன், மேலதிக அரசாங்க அதிபர்



(நிர்வாகம்) எஸ். குணபாலன் , மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட பிரதம கணக்காளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், ஏனைய திணைக்களங்களின் அதிகாரிகள் , கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர், மாவட்ட மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சீர்திருத்தம் மூலம் விரும்பிய இலக்குகளை அடைய முதலீடு செய்க

## கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல்



கொழும்பு, ஒக.31

**ஒவ்வொரு மாணவருக்கும் தரமான கல்வியை உறுதி செய்யும் வகையில் அரசாங்கத்தின் கல்விச் சீர்திருத்தங்களின் விரும்பிய இலக்குகளை அடையத் தேவையான முதலீடுகளைச் செய்யுமாறு கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அறிவுறுத்தினார்.**


அத்தோடு, அனைத்து மாணவர்களுக்கும் தரமான கல்வியை உறுதிப்படுத்தும் வகையில் எமது நாட்டின் பாடசாலை கட்டமைப்பை முறைமைப்படுத்துதல் மற்றும் பாடத் திட்ட சீர்திருத்தம் ஆகியவற்றில் கவனம் செலுத்துமாறும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

நாடு முழுவதும் பரந்து காணப்படும் தொழிற்கல்வி திட்டங்களுக்குப் பதிலாக, கல்வி அமைச்சின் தொழிற் கல்வி பிரிவின் தலையீட்டின் மூலம் ஒரு தேசிய தொழிற் கல்வித் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட பூர்வாங்கக் கலந்துரையாடல் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும் நீண்ட காலமாக பாடசாலைகளில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

ஆரம்பப் பாடசாலை அபிவிருத்தி உள்ளிட்ட பாடசாலை அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தினார். (எ)



# மனிதப் புதைகுழிகளுக்கு நீதிகோரி நேற்றும் கையெழுத்து போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக. 31

யாழ்ப்பாணம் - செம்மணி உட்பட வடக்கு கிழக்கில் இனங் காணப்பட்ட மனிதப் புதைகுழிகள் மற்றும் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பு நடவடிக்கைகளுக்கு சர்வதேச விசாரணையை வலியுறுத்தி வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட கையெழுத்துப் போராட்டம் நேற்று கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய கட்சிகள் மற்றும் பொது அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்த இந்த கையெழுத்துப் போராட்டமானது கிளிநொச்சி - கனகபுரம் வீதியில் பொதுச் சந்தைக்கு முன்பாக நடைபெற்றது. (எ)

# பொதுப்போக்குவரத்து விதிகளை மீறிய 25 மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றல்

கல்முனை, ஒக. 31

பொதுப் போக்குவரத்து சட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் பலரது மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கல்முனை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை மாவட்டம், கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்முனை கடற்கரை பள்ளிவாசல் உட்பட புறநகர் பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, மோட்டார் சைக்கிள் ஆவணம், காப்புறுதி எதுவும் இன்றி மோட்டார் சைக்கிளை செலுத்தியமை, சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியமை, ஒரு மோட்டார் சைக்கிளில் இருவருக்கு மேற்பட்டவர்கள் பயணித்தமை, அதிவேகமாக செலுத்தியமை, மிக ஒலி எழுப்பிய மோட்டார் சைக்கிள்கள், தலைக்கவசம் இன்றியும் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் இன்றி பயணித்தமை உள்ளிட்ட பொது போக்குவரத்து சட்ட திட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் 25இற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள் உட்பட அதனை செலுத்தியவர்கள் சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டனர்.

# சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கான பரிந்துரைகளை முன்வையுங்கள்

## வர்த்தகர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு

கொழும்பு, ஒக. 31

சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கான பரிந்துரைகளை முன்வைக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.

சுற்றுலாத் துறையில் ஈடுபட்டுள்ள தனியார் துறைத் தரப்பினர்களுடன் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட பூர்வாங்கக் கலந்துரையாடல் ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, 2026 ஆம் ஆண்டில் சுற்றுலாத் துறையில் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைய வெறும் ஊக்குவிப்புத் திட்டங்கள் மட்டும் போதாது. அரச மற்றும் தனியார் துறைகளை ஒருங்கிணைக்கும் புதிய மூலோபாயத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நுவரெலியா, அநுராதபுரம், மஹியங்கனை மற்றும் கதிர்காமம் போன்ற பகுதிகளில் உள்ள ஜனாதிபதி மாளிகை மற்றும் அமைச்சர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொண்டு, வசதியான சுற்றுலா விடுதிகளாக அபிவிருத்தி செய்வதில் முதலீடு செய்யுமாறு வர்த்தகர்களுக்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதி, இது தொடர்பில் விரைவில் முறையான திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் கூறினார்.

இந்த நிலையில், சுற்றுலாத் துறையில் தற்போது நிலவும் குறைபாடுகள் மற்றும் சவால்கள் குறித்து வர்த்தகர்களால் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. (எ)

# ஜனவரி 5இல் பாடசாலை தொடங்க முன் பாடப்புத்தகங்கள், சீருடை வழங்கப்படும்

கொழும்பு, ஒக. 31

2026 ஜனவரி 5ஆம் திகதி புதிய பாடசாலை தவணை தொடங்குவதற்கு முன்பு பாடப் புத்தகங்கள் மற்றும் சீருடைகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட பூர்வாங்கக் கலந்துரையாடல் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆகிய 3 துறைகளின் கீழ் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம், கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கு 2025ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் எழுந்துள்ள பிரச்னைகள் மற்றும் சவால்கள் குறித்து தனித்தனியாக ஆராயப்பட்டன.

"இலங்கை அடையாளத்தைப் பகிர்ந்துகொள்ளும் திறமையான பிரஜைகள் மூலம் உலகளாவிய சமூகத்தில் தலைசிறந்த நிலையை அடைதல்" என்ற தொலைநோக்கு பார்வையின் கீழ் கல்வி அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் இதன்போது விரிவாகக் கவனம் செலுத்தப்பட்டது.

வெளிநாட்டு உதவியின் கீழ் பாடசாலைக் கட்டமைப்பில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் குறித்தும் ஆராயப்பட்டது.

பொதுக் கல்வி நவீனமயமாக்கல் திட்டம், இரண்டாம் நிலைக் கல்வித்துறை அபிவிருத்தித் திட்டம் போன்ற திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் கல்வி அமைச்சின் அதிகாரிகள் ஜனாதிபதிக்கு எடுத்துரைத்தனர்.

பாடசாலை போஷாக்கு உணவுத் திட்டம், புலமைப் பரிசில், பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைகள், சுரக்ஷா காப்புறுதித் திட்டம், பின்தங்கிய பாடசாலைகள் மற்றும் பிரிவேனாக்களின் மாணவர்களுக்கு காலணிகள் வழங்குதல், மாணவிகளுக்கு சுகாதாரமான நெப்கின்கள் வழங்குதல், தொழில்நுட்ப பாட புலமைப்பரிசில் திட்டம், 'சுஜாத தியனி' புலமைப்பரிசில் திட்டம் மற்றும் 'சுபக' புலமைப்பரிசில் திட்டம் போன்ற நலன்புரித் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

அடுத்த ஆண்டு முதல் க. பொ. த. சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகளை திட்டமிட்டபடி நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

உயர்கல்வித்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது. இந்த ஆண்டு நாடு முழுவதும் உள்ள பல்கலைக் கழகங்களில் தொடங்கப்பட்ட புதிய நிர்மாணப்பணிகள் குறித்தும் தனித்தனியாக ஆராயப்பட்டது.

அடுத்த ஆண்டு, பல்கலைக் கழக மாணவர்களின் விடுதி வசதிகளை விரிவுபடுத்துதல், வசதியான கற்றல் சூழலை உருவாக்க பல்கலைக்கழகங்களின் உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களை ஊக்குவிப்பதன் மூலம் பல்கலைக்கழகங்களை சர்வதேச தரவரிசையில் முதலிடத்திற்கு உயர்த்துதல் மற்றும் புதிய கல்வி சீர்திருத்தங்களுக்கு ஏற்ப பட்டப் படிப்பு திட்டங்கள் மற்றும் பாடத்திட்டங்களை மீளாய்வு செய்வதன் மூலம் புதிய கல்வித் திட்டங்களைத் தயாரிப்பதாக இதன்போது அதிகாரிகள் தெளிவுபடுத்தினர்.

தொழில் கல்வித்துறையை நெறிப்படுத்துவதற்காக செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன. 2026 - 2030 காலகட்டத்தில் 50 தொழிற்பயிற்சி நிறுவனங்களை நவீனமயமாக்குதல் மற்றும் 9 திறன் மையங்களை உருவாக்குதல் உள்ளிட்ட திட்டங்கள் குறித்தும் ஆராயப்பட்டன. (எ)

# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் மரணம்

திருகோணமலை, ஒக. 31

திருகோணமலை, சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தங்கநகர் பகுதியில் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுச் சனிக்கிழமை காலை இடம் பெற்றது.

தங்கநகர் பகுதியைச் சேர்ந்த 58 வயதுடையவரே காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

இரவு வயலுக்கு காவலுக்குச் சென்றுவிட்டு காலை வீடு திரும்பும் வேளையில் தோட்டம் ஒன்றுக்குள் மறைந்திருந்த யானை தாக்கியதாக தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த பகுதியில் காட்டு யானைகள் ஊருக்குள் நுழைவதை கட்டுப்படுத்த முறையான திட்டங்கள் எவையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத்தை வலுப்படுத்துவதே எமது பயணத்தின் நோக்கமாகும்



## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சாடல்

கொழும்பு, ஒக. 31

**ஜனநாயகத்தை வலுப்படுத்துவதும் அரசியல் துன்புறுத்தலை நிறுத்துவதுமே எமது பயணத்தின் நோக்கமாகும். இதன் ஊடாக நாட்டில் ஊழல், மோசடிகளை ஒழிக்கும் செயல்முறைக்கு ஒத்துழைப்பை வழங்குவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களுடன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"ஊழல், மோசடிகளுக்கு எதிராக நாமே முதலில் உயர் நீதிமன்றத்துக்குச் சென்றோம். நாட்டையே வங்குரோத்தடையச் செய்தமைக்கு அடிப்படை உரிமை மீறல் வழக்கை ஐக்கிய மக்கள் சக்தியே தாக்கல் செய்து தீர்ப்புகளைப் பெற்றுக் கொண்டது. ஊழல்வாதிகள் எம்மிடம் இல்லை என்று கூறி அரசாங்கமும் அரச தரப்பினரும் தாம் தூய்மையானவர்கள் எனக் காண்பிக்க முயற்சிக்கின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தி அடக்குமுறை மற்றும் அச்சுறுத்தல்களை தெளிவாகவே எதிர்க்கிறது. அடிப்படை உரிமைகள் அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. பேச்சுச் சுதந்திரம், அரசியல் செயல்பாட்டுச் சுதந்திரம், மதச் சுதந்திரம் மற்றும் கலாசார சுதந்திரம் போன்றன காணப்படுகின்றன.

இந்த அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க அனைவரும் ஒன்றுபட்டுள்ளனர். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தை தலைமையாகக் கொண்டு ஒன்றிணைந்து பயணிக்க ஒன்று சேருங்கள். பக்கச்சார்பற்ற வேலைத்திட்டம் பொது நன்மை, ஜனநாயகம், மனித மற்றும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதை மையமாகக் கொண்டு இந்தப் பயணம் அமையும் போது, சேரக்கூடியவர்கள் இந்தப் பயணத்தில் சேரலாம்" - என்றார். (எ)

# இனி அரசியல் பழிவாங்கலை விடுத்து மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துக

## அரசாங்கத்திடம் எதிர்க்கட்சி வலியுறுத்தல்

கொழும்பு, ஒக. 31

அரசாங்கம் அதன் ஊழல், மோசடிகளை மறைப்பதற்காக அதிகாரத்தைப் பயன்படுத்த முயற்சிக்கிறது. இவ்வாறு அரசாங்கத்தின் அதிகார துஷ்பிரயோகத்துக்கு எதிராகவும், அடக்குமுறைகளுக்கு எதிராகவும் குரல் கொடுப்பதற்காகவே எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன. எதிர்க்கட்சிகள் மீதான அரசியல் பழிவாங்கலை விடுத்து பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க வலியுறுத்தினார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

அரசாங்கத்தின் அடக்குமுறைகளை ஒழிப்பதற்கு பல்வேறு கட்சிகளுடன் இணைந்து செயல்படுகின்றோம். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைத்துவத்தில் ஐக்கிய தேசிய கட்சி, சிறீலங்கா சுதந்திர கட்சி, சிறீலங்கா பொதுஜன பெரமுன உள்ளிட்ட பிரதான கட்சிகள் இணைந்து செயல்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எமது நோக்கம் அடக்குமுறைகளுக்கு எதிராக செயல்படுவதாகும். நீதிமன்ற வளாகத்தில் ஒன்று கூடிய ஆதரவாளர்களால் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு எவ்வித இடையூறும் விளைவிக்கப்படவில்லை. நீதிமன்றத்துக்கு பொது மக்கள் செல்வதற்கு எவ்வித தடையும் இல்லை.

சட்டத்திலும் அதற்கான ஏற்பாடுகள் இல்லை. அவ்வாறிருக்கையில் அன்றைய தினம் பொது மக்கள் உட்பட மேலும் பலருக்கு நீதிமன்றத்துக்குள் செல்வதற்கு தடையை ஏற்படுத்தியது யார்? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (எ)

# ஊழல் மோசடிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## அச்சத்தால் எதிர்க்கட்சியினர் ஒன்றிணைவு

கொழும்பு, ஒக. 31

அரசியலமைப்புடனான சர்வாதிகாரம் என்று குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் எதிர்க்கட்சிகளின் ஆட்சியில் அரசியலமைப்பு எவ்வாறு செயல்படுத்தப்பட்டது, குடும்ப ஆட்சி நிர்வாகம் பற்றி நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். ஊழல் மோசடிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அச்சத்தால் எதிர்க்கட்சியினர் அனைவரும் ஒன்றிணைந்துள்ளனர் என தொழில் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,


"எதிர்க்கட்சிகள் ஒன்றிணைவது அரசாங்கத்துக்கு எவ்விதத்திலும் சவாலாக அமையாது. இவர்களின் தற்போதைய கூட்டிணைவு அவர்களுக்கே எதிர்கால அரசியலுக்கு சவாலாக அமையலாம். பிரதான நிதி மோசடியாளரை கைது செய்தவுடன் ஏனைய ஊழல்வாதிகள் அனைவரும் ஒன்றிணைந்துள்ளனர்.

சட்டத்துக்கு அமைய கைதுகள் இடம்பெறும் போது அது அரசியமைப்புடனான சர்வாதிகாரம் என்று குறிப்பிடுகிறார்கள். அரசியலமைப்பு பற்றி தற்போது பேசும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2018 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கு முரணாக ரணில் விக்கிரம சிங்கவை பதவி நீக்கி விட்டு மகிந்த ராஜபக்‌ஷவை சட்டவிரோதமான முறையில் பிரதமராக நியமித்ததை மறந்துவிட்டார்.

நீதித்துறை சுயாதீனமாக செயல்பட இடமளிக்க வேண்டும். அரசியல் அழுத்தம் பிரயோகிக்கக் கூடாது என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்‌ஷ குறிப்பிடுகிறார். முன்னாள் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவை சட்டவிரோதமான முறையில் பதவி நீக்கி, அவரை பாராளுமன்றத்துக்கு அழைத்து விசாரணை செய்ததையும் மறந்து விட்டார்.

அரசியலமைப்புடனான சர்வாதிகாரம் என்று குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் எதிர்க்கட்சிகளின் ஆட்சியில் அரசியலமைப்பு எவ்வாறு செயல்படுத்தப்பட்டது, குடும்ப ஆட்சி நிர்வாகம் பற்றி நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ ஒரே நாடு ஒரே சட்டம் என்பதை பேச்சளவில் மாத்திரம் செயல்படுத்தினார். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை முன்னிலைப்படுத்தியே அரசாங்கம் செயல்படுகிறது. சட்டத்தின் முன் எவருக்கும் சிறப்பு சலுகை வழங்கப்படமாட்டாது" என்றார்.



# தம்பிலுவில் மயான பகுதிகளில் இரண்டாம் நாள் அகழ்வுப் பணி

திருக்கோவில், ஒக. 31

கருணா - பிள்ளையான் குழு முக்கியஸ்தர் இனிய பாரதியின் மற்றுமொரு சகாவின் வாக்குமூலத்தின் அடிப்படையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மதியம் முதல் அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்பிலுவில் மயானத்தை அண்டிய பகுதிகளில் மீண்டும் 2 ஆம் கட்ட அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி தெசிபா ரஜீவன் முன்னிலையில் 3 ஜே.சி.பி. இயந்திரம் மூலம் பல்வேறு அடையாளம் காணப்பட்ட இடங்கள் தோண்டப்பட்டு நிறைவடைந்தன.

கடந்த 2005 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து கருணா-பிள்ளையான் அணியின் முக்கியஸ்தரான இனிய பாரதியின் முக்கிய சகாவாக செயல்பட்ட அம்பாறை மாவட்டம் காரைதீவு பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் குறித்த பகுதிக்கு கைவிலங்கிடப்பட்டு கொண்டு வரப்பட்டிருந்தார்.

அவர் கடந்த காலங்களில் திருக்கோவில் பகுதியில் தனியார் தொலைத்தொடர்பு சிம் அட்டை விற்பனை முகவராக செயல்பட்ட அருளானந்தன் சீலன் என்பவரை கடத்திப் படுகொலை செய்து குறித்த இடத்தில் புதைத்திருப்பதாக அரச சாட்சியாக மாறி குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தார்.

வியாழக்கிழமை மாலை குறித்த பிரதேசத்தை சுற்றி பாதுகாப்பு வழங்கப்பட்டதுடன் முதலாம் நாள் அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகியிருந்தன.

எனினும், எந்தவித சான்றுப் பொருட்களும் அவ்விடத்தில் கிடைக்காமையால் அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் மறுநாள் அதாவது நேற்று அகழ்வுப் பணியை இரண்டாவது நாளில் முன்னெடுக்க உத்தரவிட்டிருந்தார்.

இதற்கமைய அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி உட்பட பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள், பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், தடயவியல் பொலிஸார் எனப் பலரும் பிரசன்னமாயிருந்த நிலையில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இரண்டாவது நாளிலும் எதுவித சான்றுப் பொருட்களும் அங்கு கிடைக்கப்பெறவில்லை. இதனால், குறித்த அகழ்வுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டு நீதிவானின் உத்தரவுக்கமைய நிறைவு செய்யப்பட்டது. (எ)

# பயங்கரவாத தடைச்சட்டம் இரத்து வெளிப்படைத்தன்மை இல்லை

## விஜயதாஸ ராஜபக்‌ஷ சொல்கிறார்

கொழும்பு, ஒக. 31

பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச் செய்தல், புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவை தயாரித்தல் தொடர்பில் அரசாங்கம் வெளிப்படைத்தன்மையில் செயல்படவில்லை என்று முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்‌ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் துறைசார் நிபுணர்கள், சிவில் அமைப்பினர் மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்ட தரப்பினரிடமிருந்து எவ்வித ஆலோசனைகளும் பெற்றுக்கொள்ளப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவுக்கான பணிகள் எதிர்வரும் மாதத்துக்குள் நிறைவுபடுத்தப்படும் என்று நீதியமைச்சு குறிப்பிட்டுள்ளமையை கவனத்தில் கொள்ள வேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதாகவும் அதற்குப் பதிலாக பிறிதொரு சட்டத்தை இயற்றுவதாகவே தேசிய மக்கள் சக்தி தேர்தல் பிரசார மேடைகளில் குறிப்பிட்டது. குறிப்பாக இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு வாக்குறுதியளித்தது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச் செய்து அதற்குப் பதிலாக பிறிதொரு சட்டத்தை இயற்றுவதற்கு நாங்கள் மேற்கொண்ட சகல நடவடிக்கைகளுக்கும் எதிராகவே தேசிய மக்கள் சக்தி பாராளுமன்றத்திலும் மக்கள் மத்தியிலும் செயல்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி, தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு அமைய பாதுகாப்புடன் தொடர்புடைய சட்டம் இயற்றப்பட வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் கிடையாது. - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
31.08.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், ஆவணி 15

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டியது

தேவைக்கு அதிகமாக இராணுவ பிரசன்னத்தை எதிர்த்து தமிழ் கட்சிகள் கையெழுத்து சேகரிக்கின்றன. இதுபோன்ற கையெழுத்து சேகரிக்கும் செயல்பாடுகள் கடந்த காலத்திலும் பல சந்தர்ப்பங்களில் இடம் பெற்றிருக்கின்றன. ஆனால், அவைகள் எந்தவோர் அரசியல் தாக்கத்தையும் ஏற்படுத்தியமைக்கு சான்றுகள் இல்லை. இது அரசியல் கட்சிகளும் அறியாத விடயமல்ல.

ஆனாலும் வேறு எதனையும் செய்ய முடியாத நிலையிலும், எதற்கு முன்னுரிமை வழங்க வேண்டுமோ, அவ்வாறான விடயத்தில் ஒன்றுபட்டுச் செயல்பட முடியாத நிலையில்தான், இவ்வாறான நாற்காலிப் போராட்டங்களிலும் காட்போர்ட் போராட்டங்களிலும் நமது கட்சிகள் என்பவை, மீண்டும், மீண்டும் ஒன்றுபட்டுக் கொள்கின்றனவா? இந்த அடிப்படையில் நோக்கினால், தமிழில் கூறியது கூறல் என்பது போல்தான், தமிழ்த் தேசிய கட்சிகளின் ஒற்றுமையும் செயல்பாடுகளும் இருக்கின்றன?

சொன்னதைச் சொல்லிக் கொண்டிருப்பதற்கு கட்சிகள் தேவையில்லை, அதற்கு சாதாரண சமூகமட்ட அமைப்புக்களே போதுமானது. அரசியல் கட்சிகள் என்பவை காலத்தை புரிந்து கொண்டு, அதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். இன்று கையெழுத்துப் பெறுவதற்காக ஒன்றுபட்டிருக்கும் கட்சிகளால் மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள் என்னுமடிப்படையில் கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள முடியாதா? இந்த இடத்தில்தான் தமிழ் கட்சிகள் என்பவை தொடர்ந்தும் கூட்டத்தில் சத்தமெழுப்பும் கட்சிகளாக மட்டுமே சுருங்கிப் போகின்றன.

மாகாண சபை தொடர்பில் இதுவரையில் இருந்து வந்த ஒரு முக்கிய விடயம் மாறிவிட்டது என்பதை தமிழ் கட்சிகளின் தலைவர்கள் என்போரால் புரிந்து கொள்ள முடிகின்றதா? இதுவரையில் அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தை இந்தியா பார்த்துக்கொள்ளும் என்னும் பார்வையொன்று தமிழர் அரசியலில் மேலோங்கியிருந்தது. இந்தியாவிடம் முறையிடுகின்றோம் என்பதை ஓர் அரசியலாகவே தமிழ் கட்சிகள் அவ்வப்போது முன்வைத்து வந்திருக்கின்றன.

ஆனால், இந்த அணுகுமுறை இனி கைகொடுக்கப் போவதில்லை ஏனெனில், தமிழ் கட்சிகள் விடயத்தில் ஒன்றுபட்டு செயல்பட்டால் ஒழிய இந்த விடயத்தில் இந்தியா இனித் தலையீடு செய்வதற்கான வாய்ப்பில்லை. மாறிவரும் உலக அரசியல் சூழலில் அயல்நாடுகளில் இந்தியாவின் தலையிடும் தேவைப்பாடு மாறிவிட்டது. குறிப்பாக இலங்கை விடயத்தில், அதிலும் குறிப்பாக தமிழர் விடயத்தை அடிப்படையாகக் கொண்டு தலையீடு செய்யும் அரசியல் சூழல் இப்போது மிகவும் பலவீனமாகிவிட்டது.

இந்தியாவிற்கு எதிர் நிலையில் இருக்கும் ஒரு நாடு இலங்கையின் உள் விடயத்தில் தலையீடு செய்தால் மட்டும்தான் இந்தியா இனித் திரும்பும் என்னும் நிலைமைதான் காணப்படுகின்றது. அப்படியான வாய்ப்பும் இல்லை. இந்தப் பின்புலத்தில் சிந்தித்தால், மாகாண சபைத் தேர்தல் முதல்கொண்டு அதிகாரங்களை முழுமையாக பயன்படுத்தும் விடயம் வரையில், தமிழ் கட்சிகள்தான் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும். மாகாண சபை விவகாரத்தை ஜனநாயகத்திற்கான குரலாகவும் வடக்கு கிழக்கின் அபிவிருத்திக்கான குரலாகவும் மாற்றியமைக்க வேண்டும். வெறுமனே அதிகாரப் பகிர்விற்கான ஒரு விடயமாக மாகாண சபையை இனியும் முன்னிறுத்த முடியாது.

ஆனால், இந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இணையக் கூடிய கட்சிகள் ஏன் தொடர்ந்தும் தங்களின் கவனத்தை வேறு விடயங்களை நோக்கி குவிக்கின்றன? ஏன் இதனை புரிந்து கொண்டு செயல்பட முடியாமல் இருக்கின்றனர்? இவர்களை தடுக்கின்ற காரணிதான் என்ன? அல்லது தமிழ் மக்களுக்கு ஆகக் குறைந்த விடயங்கள் கூட கிடைத்துவிடக் கூடாது என்பதில் மட்டும்தான் இந்தக் கட்சிகள் உறுதியாக இருக்கின்றனவா?

# கைதானவர்களை அழைத்துவர விசேட குழு இந்தோனேஷியாவுக்கு

கொழும்பு, ஓக. 31

இந்தோனேஷியாவில் கைது செய்யப்பட்டுள்ள பாதாள உலகக் குழு தலைவர்களான கெஹெல்பத்தர பத்மே உள்ளிட்ட ஐவர், இன்று நாட்டுக்கு அழைத்து வரப்படவுள்ளனர்.

அவர்களை அழைத்து வருவதற்காக விசேட பொலிஸ் குழு நேற்று நாட்டிலிருந்து சென்றுள்ளதாக தெரியவருகின்றது.

இந்தோனேஷிய தலைவர் ஜகார்த்தாவில் வைத்து கெஹெல்பத்தர பத்மே உள்ளிட்ட ஐந்து பேர் அண்மையில் அந்த நாட்டு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

நாட்டிலிருந்து சென்ற இரண்டு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களான ரோஹன் ஒலுகல மற்றும் மகிந்த ஜயசுந்தர ஆகியோர் இந்தோனேஷிய பொலிஸாருடன் இணைந்து முன்னெடுத்த விசேட நடவடிக்கையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பாதாள உலகக் குழுத் தலைவர்களான கெஹெல் பத்தர பத்மே, கமாண்டோ சலிந்த, பாணந்துறை நிலங்க, பெக்கோ சமன் மற்றும் தெம்பிலி லஹிரு ஆகியோர் இதன்போது கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட பெக்கோ சமனின் மனைவி மற்றும் குழந்தை பின்னர் விடுவிக்கப்பட்டதுடன், அந்த நாட்டில் உள்ள இலங்கைத் தூதரகம் அவர்களை மீண்டும் நாட்டுக்கு அனுப்ப ஏற்பாடு செய்தது.

இதன்படி, நேற்று முன்தினம் மாலை நாடு திரும்பிய பெக்கோ சமனின் மனைவி மற்றும் குழந்தை, கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள குற்றப் புல னாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளால் பொறுப்பேற்கப்பட்டு, ஆரம்பகட்ட வாக்கு மூலங்கள் பதிவுசெய்யப்பட்டன.

பின்னர் குறித்த பெண்ணும் அவரது குழந்தையும் இரவு சுமார் 10. 00 மணியளவில் கொழும்பில் உள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் தலைமையகத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் நேரடி தொடர்பு வைத்திருந்ததற்காக குறித்த பெண் கைது செய்யப்பட்டதாக அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.(எ)

# இணுவில் அறிவாலயத்தில் இரத்ததானம்

யாழ்ப்பாணம், ஓக. 31

இறையடி சேர்ந்த இளைஞர்கள் நினைவாக வருடாவருடம் நடைபெறும் இரத்ததான முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் இணுவில் அறிவாலய மண்டபத்தில் (இணுவில் கந்தசுவாமி கோவிலுக்கு அருகாமை) நடைபெறும். (எ)

# பணவீக்கம் மீண்டும் உயர்வு

கொழும்பு, ஓக. 31

11 மாதங்களுக்குப் பிறகு கொழும்பு நுகர்வோர் விலைக் குறியீட்டை அடிப்படையாகக் கொண்ட பணவீக்கம் ஓகஸ்ட் மாதத்தில் மீண்டும் அதிகரித்துள்ளது.

புள்ளியியல் துறை வெளியிட்ட தரவுகளின்படி, ஜூலை மாதத்தில் -0.3 வீதத்திலிருந்து ஓகஸ்ட் மாதத்தில் பணவீக்கம் 1.2 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இங்கு, உணவுப் பணவீக்கம் ஜூலை மாதத்தில் 1.5 சதவீதத்திலிருந்து 2.0 சதவீதமாகவும் உணவு அல்லாத வகை ஜூலை மாதத்தில் -1.2 சதவீதத்திலிருந்து 0.8 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது.

# 'மீண்டும் ஒருநாள் பள்ளிக்கு' ஸ்கந்தவரோதயவில் நிகழ்வு



யாழ்ப்பாணம், ஓக. 31


ஸ்கந்தவரோதய கல்லூரியின் 2000ஆம் ஆண்டு உயர்தரப் பிரிவு மாணவர்களின் 'மீண்டும் ஒருநாள் பள்ளிக்கு' என்ற நிகழ்வு நேற்று கல்லூரி மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள கந்தன் ஆலயத்தில் வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து 2000ஆம் ஆண்டு உயர்தரப் பிரிவு மாணவர்கள் தமக்கு கற்பித்த ஆசிரியர்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

மறைந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு ஈகச் சுடர் ஏற்றப்பட்டு நினைவஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நண்பர்கள் அறிமுகம், ஆசிரியர்கள் கௌரவிப்பு, விருந்தினர்கள் உரை, ஆசிரியர்கள் உரை மற்றும் பாடசாலை நினைவூட்டல்கள் என்பன நடைபெற்றன.

இதில் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ- 05)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சியே வலிமை!

அனந்த பத்மநாபன்

சிலர் எப்பேர்ப்பட்ட சவால்களையும் அசராமல் எதிர்கொள்கிறார்கள். பெரும் துயரங்களைச் சந்தித்தபோதும் மனம் தளராமல் உறுதியாக இருக்கிறார்கள். இது நமக்கு ஒரு கேள்வியை எழுப்புகிறது: இந்த மன உறுதி இயற்கையாகவே கிடைத்ததா அல்லது வாழ்க்கையிலிருந்து கற்றுக்கொண்டதா? இது சிலருக்கு மட்டுமே உரிய வரமா அல்லது நாம் அனைவரும் வளர்த்துக் கொள்ளக் கூடியதா?

அண்மையில் மகளிர் உலகக் கோப்பையை வென்ற இந்திய சதுரங்க வீராங்கனை திவ்யா தேஷ்முக்கின் வாழ்க்கையை ஆராய்ந்தால், அவரது 19 வயதுக்கு மீறிய பக்குவம் நம்மை வியப்பில் ஆழ்த்தும். அவரது வெற்றிக்கு முக்கியக் காரணம் இரும்பு போன்ற மன உறுதியே. ஒரு போட்டியில் தோல்வியடைந்தாலும், அதன் தாக்கம் அடுத்த போட்டியைப் பாதிப்பதில்லை. நெருக்கடியான சூழலிலும் பயமின்றி, உறுதியான மனதுடன் முடிவெடுக்கிறார்.

அதிக அழுத்தம் நிறைந்த தருணங்களில் மற்றவர்கள் தடுமாறும்போது, அவரது அசைக்க முடியாத மன உறுதியே வெற்றிக்கு வழிவகுக்கிறது. தனது எண்ணங்களையும் உணர்வுகளையும் கட்டுப்படுத்தும் ஆற்றல், இலக்குகளில் முழுக் கவனம் செலுத்த உதவுகிறது. இந்தக் குணங்கள் அவரை மனதளவில் வலிமையான ஒரு நபராக மாற்றியுள்ளன. திவ்யாவின் மன உறுதி, இளம் தலைமுறையினருக்கு ஒரு உந்துசக்தியாக அமைந்துள்ளது.

வாழ்க்கை ஒரு மாரத்தான் ஓட்டம் போன்றது. அதில் வெற்றிபெற உடல் வலிமை மட்டும் போதாது. சவால்கள், தோல்விகள், எதிர்பாராத திருப்பங்களை எதிர்கொள்ளும் மன உறுதி மிக அவசியம். உளவியலாளர்கள் இதை 'அறிவாற்றல் இருப்பு' மற்றும் 'மன வலிமை' என்று குறிப்பிடுகிறார்கள்.

இது பிறப்பிலேயே கிடைக்கும் வரம் அல்ல. வாழ்நாள் முழுவதும் தொடர் பயிற்சியால் வளர்த்துக்கொள்ளப்படும் திறமை. நேர்மறையான அணுகுமுறை, தன்னம்பிக்கை, உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் திறன் மற்றும் தோல்வியைப் பயனுள்ள பின்னூட்டமாகக் காணும் திறன் போன்ற பல காரணிகளால் இந்த வலிமை உருவாகிறது. இது சவால்களை எதிர்கொள்ளும்போது, நம்முடைய அறிவாற்றல் வளங்களை அணுக உதவுகிறது. இதன் மூலம், ஒரு தோல்வியின்போது என்ன தவறு நடந்தது என்பதை அமைதியாகப் பகுப்பாய்வு செய்து, புதிய வழிகளைக் கண்டறிய முடிகிறது.



உலகின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த சாதனையாளர்களின் வெற்றிகளை நாம் உற்று நோக்கினால், அவர்களுக்கும் நமக்கும் உள்ள ஒரே வித்தியாசம் இந்த மன உறுதியே என்பதை உணரலாம்.

டென்னிஸ் வீரர் நோவாக் ஜோகோவிச்சின் வெற்றிகள், வெறும் உடல் வலிமையின் சான்றுகள் அல்ல. பெரிய போட்டிகளில் சாத்தியமற்ற தடைகளைத் தாண்டி அவர் வென்றது, மன உறுதியின் சிறந்த பாடம்.

இதற்கு நேர்மாறாக, 27 ஆண்டுகள் சிறையில் இருந்து வெளிவந்த நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கையைப் பார்க்கலாம். அவர் கசப்புடன் அல்ல, மாறாக நல்லிணக்கத்துடன் வெளிப்பட்டார். துன்பத்தையும் ஒற்றுமைக்கான சக்தியாக மாற்றிய அவரது திறன், மன உறுதிக்கும் அறிவாற்றல் இருப்புக்கும் உள்ள ஆழமான தொடர்பை நிரூபிக்கிறது. அத்தகைய கடுமையான சூழ்நிலைகளிலும் தனது மனத்திறன்களைப் பராமரித்து, கூர்மைப்படுத்திய அவரது திறன், மனித மனத்தின் நெகிழ்வுத்தன்மைக்கு ஒரு எடுத்துக்காட்டு.

இந்த மகத்தான மனிதர்களின் வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக்கொள்வது என்னவென்றால், மன உறுதி என்பது ஒரு நிலையான பண்பு அல்ல. அது வளர்க்கக்கூடிய மற்றும் வலுப்படுத்தக்கூடிய ஓர் ஆற்றல். கடினமான அனுபவங்கள் நம்மை வலிமையாகவும், மன உறுதியுள்ளவர்களாகவும் மாற்றும். சவால்களை எதிர்கொள்ளும் போது, நமக்குள்ளேயே இருக்கும் உள் வலிமையை நாம் கண்டறிகிறோம்.

வலிமையான மனம் என்பது உணர்வுகளை அடக்கி வைப்பது அல்ல. மாறாக, அவற்றை நிர்வகிக்க அறிந்து கொள்வது. கோபம், துக்கம், வலி போன்ற கடினமான உணர்வுகள் இயல்பானவை என்பதை ஏற்றுக்கொள்ள நெகிழ்வுத் தன்மை உதவுகிறது. அதே சமயம், அவை நம்மை ஆட்கொள்ளாமல் இருக்க உதவும் திறன்களையும் இது வழங்குகிறது.

விழிப்புணர்வு மற்றும் ஆழ்ந்த சுவாசம் போன்ற உத்திகள், நம் உணர்வுகளைத் தீர்ப்பின்றி அவதானிக்கவும், தூண்டுதலுக்கு எதிர்வினையாற்றுவதற்குப் பதிலாக ஆக்கபூர்வமான பதிலைத் தேர்வு செய்யவும் அனுமதிக்கின்றன.

நெகிழ்வுத்தன்மை ஒரு உள்ளார்ந்த கட்டுப்பாட்டு உணர்வை வளர்க்கிறது. அதாவது, நம் செயல்களும் தேர்வுகளும் நிகழ்வுகளின் விளைவைப் பாதிக்க முடியும் என்ற நம்பிக்கையை இது தருகிறது. இது வெளிப்புற சூழ்நிலைகளைக் கட்டுப்படுத்துவதைப் பற்றியது அல்ல. மாறாக, நம்மால் எதைக் கட்டுப்படுத்த முடியுமோ அதன் மீது கவனம் செலுத்துவதைப் பற்றியது. நம்முடைய மனப் பான்மை, முயற்சி மற்றும் அடுத்த நடவடிக்கைகள். இந்தச் செயல்திறன் உணர்வு, பாதிக்கப்பட்டவர்போல உணர் வதைத் தடுக்கும் ஒரு சக்திவாய்ந்த மருந்தாகச் செயல்படுகிறது.

நம் மன உறுதியை வளர்க்க சில எளிய, ஆனால் சக்திவாய்ந்த வழிகள் உள்ளன. அவை, இலக்குகளை எளிதாக்குங்கள்- பெரிய இலக்குகளைச் சிறிய, எளிதாகச் செய்யக் கூடிய பகுதிகளாகப் பிரிப்பது மனச் சோர்வைத் தடுக்கும். ஒவ்வொரு சிறிய வெற்றியும் தன்னம்பிக்கையை அதிகரித்து, மன உறுதியை வலுப்படுத்தும்.

அன்றாட மனப் பயிற்சிகள்- தினமும் சில நிமிஷங்கள் தியானம் அல்லது ஆழ்ந்த சுவாசம் செய்வது எதிர்மறை எண்ணங்களைக் கட்டுப்படுத்த உதவும். இது உணர்வுகளை நிர்வகிக்கவும், மனதை அமைதிப்படுத்தவும் உதவுகிறது.

உடல் ஆரோக்கியத்தில் கவனம்- நல்ல உணவு, போதுமான தூக்கம் மற்றும் உடற்பயிற்சி ஆகியவை மன ஆரோக்கியத்தை மேம்படுத்தும். ஆரோக்கியமான உடலே, ஆரோக்கியமான மனதுக்கு அடித்தளம்.

மன உறுதி நோக்கிய பயணம் ஒரு தொடர் முயற்சி. 'அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும் பெருமை முயற்சி தரும்' என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, 'நம்மால் முடியுமா' என்று தளர்ச்சி அடையாமல், 'முடியும்' என்ற நம்பிக்கையுடன் முயற்சி செய்தால் அதுவே பெரிய வலிமையாக அமையும். ஆம், நம் திறன் நம் கையில்.

## இந்தவார ராசிபலன் 31.08.2025 - 06.09.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - ஆவணி 15
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : அஷ்டமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் பணவரவு அதிகரிப்பது போல், செலவுகளும் கூடும். மனக் கவலைகளை மனைவியின் அரவணைப்பு குறைக்கும். தாயின் ஆரோக்கிய நிலை மற்றும் குழந்தைகளின் செயல்பாடுகளால் உங்கள் முகத்தில் புன்னகை தவழ்கிறதே ? பணிபுரியும் பெண்கள் தங்கள் பணி மற்றும் குடும்ப சுமைகளை ஒருசேர சுமப்பதில் சிரமப்படுவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றியும், அரசுத் துறையால் லாபமும் கிடைக்கும். மகிழ்ச்சி தரும் நாள்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் மனைவி மக்களுடன் வாழ்க்கை சந்தோஷமாக கழியும். புனித காரியங்களில் ஈடுபடுவர். விவசாயிகளுக்கு அதிக மகசூல் ஏற்பட்டு, இலாபத்தால் வசதிகள் பெருகும். பணிபுரியும் பெண்கள் தங்கள் உயர் அதிகாரிகள் ஆதரவால் முன்னேற்றம் காண்பர். சிலருக்குத் தந்தைவழி உறவுகளால் சங்கடங்கள் ஏற்படும். அரசு வகையில் அபராதங்கள், வரி பாக்கிகள் என உடனே பணம் கட்டவேண்டிய கெடுபிடிகள் இருக்கும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெரும். எதிரிகளின் திட்டங்களை முறியடிப்பீர்கள். அரசு பதவியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் தயவால் பயன் பெறுவர். பணிபுரியும் பெண்களுக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும். போட்டி பந்தயங்களில் வெற்றி உண்டு.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் உங்களுக்கு பெரியவர்கள் ஆசியும், மேலதிகாரிகளின் ஆதரவு, புதிய தொடர்புகள் ஆகியவை மூலம் நன்மை ஏற்படும். நினைத்த காரியங்கள் நினைத்தபடி நடக்கும். மாணவர்களுக்கு கவனக் குறைவு காரணமாக மதிப்பெண்கள் குறையலாம். எனவே, விவேகத்துடன் நடப்பது நல்லது. சிலருக்கு விருப்பம் இல்லாத இடத்திற்கு இடமாற்றங்கள் ஏற்படலாம். மனோதைரியம் ஓங்கும். பயிர், மனை இவற்றால் லாபம் ஏற்படும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் சுபகாரிய செலவுகள் ஏற்படும். பயணங்களால் ஆதாயம் ஏற்படும். தலைமைப் பதவிகள் தேடிவரும். தங்கள் சேவைகள் உயர் அதிகாரிகளால் அங்கீகரிக்கப்படும். உங்கள் உயர்வைக் கண்டு உடன் பணிபுரிபவர்கள் பொறாமை கொள்வர். சிலருக்கு உஷ்ண சம்பந்தமான நோய்கள் ஏற்படலாம். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் திருமணம், மக்கட்பேறு ஆகியவை ஏற்படலாம். கார், ஸ்கூட்டர் போன்ற உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். எவராலும் சாதிக்க இயலாத சாதனைகளைச் செய்து முடிப்பர். தனது ராஜ தந்திரத்தால் அரசியலில் நல்ல பதவிகளை அடைவார். புண்ணிய காரியங்கள், தான தர்மங்கள் செய்யும் பாக்கியம் ஏற்படும். வளம் கொழிக்கும் வயல்களில் வசதிகள் பெருகும். திடீர்ப் பயணங்கள் ஏற்படலாம். புதிய கடன்கள் வாங்க நேரும். இடைவிடாத பணி காரணமாக நேரத்திற்கு உணவு உண்ண இயலாமல் போகும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் கல்வியில் தேர்ச்சி ஏற்படும். பக்தி சொற்பொழிவுகள், பாடல்கள் கேட்பதில் ஆர்வம் எழும். எதிர்பாராத தனவரவு, புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனதுக்குப் பிடித்த படி மனை, வீடு மற்றும் வாகன வசதிகள் கிடைக்கும். கலைஞர்களுக்குப் புதிய ஒப்பந்தங்களால் வருமானம் அதிகரித்தால் உள்ளம் மகிழும். விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் அசாத்திய வளர்ச்சி ஏற்படும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் செல்வத்திற்கு அதிபதியான அலைமகள் உங்கள் மீது கருணை செலுத்துவாள். தன வருவாய் திருப்திகரமாக இருக் கும். பெண்கள் தங்கள் சேமிப்பை வைத்து புதிய ஆபரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். சிலருக்குத் திருமணம், மக்கட்பேறு, பால்வளம் ஆகியவை ஏற்படும். தங்கள் வேலை அங்கீகரிக்கப்பட்டு, தகுந்த பரிசுக ளும் கிடைக்கும். ஒரு கூட்டத்திற்குத் தலைமை தாங்கும் நிலை ஏற்படும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகள் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் அதிக அளவு இலாபத்தை எதிர்பார்க்கலாம். சிலருக்குக் காரியத் தடைகள், வழக்கு வியாஜ்ஜியங்கள் ஏற்படலாம். அவற்றில் தீவிரமான முயற்சி காரணமாக வெற்றி காணலாம். பெற மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய நிலை ஏற்படும். வீண் ஆசைகளை விலக்கி வைப்பது நல்லது.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் உங்கள் சம்பாதிக்கும் திறன் மேம்படும். கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கை காரணமாக சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அரசு வேலைக்கு மனு செய்தவர்கள் அனுகூலமான செய் தியை பெறுவர். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும். அதற்கேற்ப ஆதாயம் கூடும். குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்தி ருக்கும். . குழந்தைகளின் முன்னேற்றங்கண்டும் மனமகிழ்ச்சி அதிகரிக்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் தாராளமான தன வரவு வரும். செல்வம் சேரும். பலவகைகளிலும் பேரும் புகழும் ஏற்படும். தைரியம் கூடும். உயர்ரக ஆடை ஆபரண வகைகள், போகப் பொருட்கள், பொழுதுபோக்கு உபகரணங்கள் யாவும் கிடைக்கும். பெரிய மகாராஜன் போல் வாழும் வகை ஏற்படும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். வீட்டில் மங்கள சுப காரியங்கள் நடக்கும். புதிய தொடர்புகள் மகிழ்ச்சி தரும். சிலருக்கு சுப விரயங்கள் ஏற்படும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். புதிய பதவிகள் தேடிவரும். அந்தஸ்து உயரும். அரசுப் பணி புரிபவர்களுக்கு அனுகூலமான மற்றும் அற்புதமான வாரம். அவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு இருப்பதால், எதிரிகளின் கொட்டம் அடங்கும். பணிபுரியும் பெண்கள் தங்களுக்கு விருப்பமான இடத்திற்கு இடமாற்றம் பெற முயற்சிப்பர். விவசாயிகளுக்கு ஆதாயம் கிட்டும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு மன மகிழ்ச்சி அடைவர். பேச்சில் கவனம் தேவை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# கைது செய்ப்பட்ட பிறகு எதிரணிக் கட்சிகளை ஐக்கியப்படுத்தக்கூடிய வலிமையான அரசியல் ஆளுமையாக ரணில் மாறியிருக்கிறாரா?



வீரகத்தி தனபாலசிங்கம்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் அரசியல் வரலாற்றில் பல முதலாவது ‘சாதனைகளுக்கு’ சொந்தக்காரர். இந்த நாட்டின் மிகவும் பழைமைவாய்ந்த அரசியல் கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக விக்கிரமசிங்கவை போன்று வேறு எந்த அரசியல் தலைவரும் நீண்டகாலம் பதவி வகித்ததில்லை. மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக தனது கட்சியின் தலைவராக இருந்து வரும் அவரே மிகவும் நீண்டகாலம் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவராக பதவி வகித்த அரசியல் தலைவர்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதல் தடவையாக பாராளுமன்றத்தில் தேர்தல் மூலமாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக தெரிவான முதல் அரசியல் தலைவர் விக்கிரமசிங்கவே. இறுதியில் அவரே அதிகார துஷ்பிரயோக குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்ப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட முதலாவது முன்னாள் ஜனாதிபதி என்ற அவப்பெயரையும் தனது சுமார் அரை நூற்றாண்டுகால அரசியல் வாழ்வின் அந்திமக் காலத்தில் சம்பாதிக்கவேண்டிய வேண்டியதாகப் போய்விட்டது.



ஜனாதிபதியாக இருந்த வேளையில் 2023 ஆம் ஆண்டு செப்டெம்பரில் ஜி - 77 நாடுகளின் உச்சி மகாநாட்டில் பங்குபற்றுவதற்காக கியூபாவுக்கும் அடுத்து ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 78 வது வருடாந்த கூட்டத் தொடரில் பங்குபற்றுவதற்காக அமெரிக்காவுக்கும் உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொண்ட விக்கிரமசிங்க நாடு திரும்பும் வழியில் லண்டனில் தனிப்பட்ட தேவைக்காக தங்கிநின்ற இரு நாட்கள் தனக்கும் தனது குழுவினருக்குமான செலவுகளுக்கு அரச பணத்தை பயன்படுத்தியதன் மூலம் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து விட்டார் என்பதே அவர் மீதான குற்றச்சாட்டாகும்.

முன்னாள் ஜனாதிபதியின் மனைவியான பேராசிரியை மைத்ரி விக்கிரமசிங்கவுக்கு ஐக்கிய இராச்சியத்தின் பல்கலைக்கழகம் ஒன்று கௌரவப் பேராசிரியை பட்டம் வழங்கிக் கௌரவித்த வைபவத்தில் பங்கு பற்றுவதற்காகவே அவர் லண்டனுக்கு சென்றார். பேராசிரியை மைத்ரி தனக்குரிய கௌரவத்தைப் பெறுவதற்காக தனது சொந்தப் பணத்திலேயே ஐக்கிய இராச்சியத்துக்கு சென்றிருந்தார். அமெரிக்க விஜயத்தை முடித்துக் கொண்டு லண்டனுக்கு சென்று தங்கியிருந்த போது விக்கரமசிங்க தனது அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு பிரிவினருக்கான செலவினங்களுக்கு 16.6 மில்லியன் ரூபா அரச பணத்தை செலவிட்டதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது.

இலங்கை பொலிஸின் குற்றவியல் புலனாய்வு திணைக்களத்தின் அழைப்பின் பேரில் ஆகஸ்ட் 22 ஆம் திகதி தனது வாக்குமூலத்தை வழங்குவதற்கு அதன் தலைமையகத்துக்கு சென்ற விக்கிரமசிங்கவை நீண்ட நேரம் விசாரணை செய்தபிறகு பொலிசார் கைது செய்து கொழும்பு கோட்டை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். 'நாடக பாணியிலான' நிகழ்வுகளுக்கு பிறகு அன்றையதினம் இரவு 10 மணிக்கு பிறகு அவரை ஆகஸ்ட் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

கைவிலங்கிடப்பட்ட நிலையில் சிறைச்சாலை வாகனத்தில் கூட்டிச் செல்லப்பட்ட விக்கிரமசிங்கவின் உடல் நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்ததை அடுத்து அவர் முதலில் வெலிக்கடைச் சிறைச்சாலை வைத்தியசாலையிலும் பிறகு கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டார். தீவிரசிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த அவரால் ஆகஸ்ட் 26 ஆம் திகதி நீதிமன்றத்திற்கு செல்லமுடியவில்லை. இணையவழியின் மூலமாக நீதிமன்றத்தில் தனது பிரசன்னத்தை உறுதி செய்த முன்னாள் ஜனாதிபதியின் உடல் நிலையைக் கருத்தில் கொண்டு கோட்டை மாஜிஸ்திரேட் அவரை தலா ஐந்து மில்லியன் ரூபா மூன்று ஆளுறுதிப் பிணையில் விடுதலை செய்தார்.

ஒருவாரகாலம் தேசிய வைத்தியசாலையில் தீவிரசிகிச்சைப் பிரிவில் இருதய நோய் மற்றும் நீரிழிவு உட்பட பல பாரதூரமான நோய்களுக்காக விசேட வைத்திய நிபுணர்களின் கண்காணிப்பில் சிகிச்சை பெற்ற பிறகு ஆகஸ்ட் 29 வெள்ளிக்கிழமை முன்னாள் ஜனாதிபதி வீடுதிரும்பினார். வெளிநாட்டில் சிகிச்சை பெறுவதற்கு விக்கிரமசிங்க விரும்பினால் அரசாங்கம் அதற்கு அனுமதிக்குமா என்று தெரியவில்லை. முன்னாள் ஜனாதிபதி வெளிநாட்டுக்கு செல்லாமல் இருப்பதை உறுதிசெய்வதற்கு அவரது கடவுச்சீட்டை பறிமுதல் செய்யுமாறு சட்டமா அதிபரின் சார்பில் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

மீண்டும் விக்கிரமசிங்கவின் வழக்கு அக்டோபர் 29 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படும். அவரின் கதியை இனிமேல் நீதிமன்றமே தீர்மானிக்கும் என்பதால் இதற்கு மேல் நாம் அதைப்பற்றி எதையும் கூறுவது நீதித்துறையை அவமதிப்பதாக அமைந்து விடும். அரச பணத்தை தனிப்பட்ட தேவைக்காக பயன்படுத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டு அவர் கைதுசெய்யப்பட்டதற்கு பிறகு அந்தவிவகாரம் முற்றிலும் சட்டப் பிரச்சினையாக மாறிவிட்டாலும் கூட, அது அரசியல் அரங்கில் பெரும் பதற்றத்தை தோற்றுவித்திருக்கிறது.

விக்கிரமசிங்கவை கடந்தகாலத்தில் மிகவும் கடுமையாக விமர்சித்த அரசியல்வாதிகளும் கூட அணிதிரண்டு அவருக்கு தங்களது ஆதரவையும் ஒருமைப்பாட்டையும் வெளிக்காட்டினர். பெரும்பாலும் சகல எதிர்க்கட்சிகளின் தலைவர்களுமே செய்தியாளர்கள் மகாநாடுகளை கூட்டி விக்கிரமசிங்கவை நியாயப்படுத்தியதுடன் ஜனாதிபதிகளின் உத்தியோகபூர்வ வாழ்வையும் தனிப்பட்ட வாழ்வையும் வேறுபடுத்திப்பார்க்கக் கூடாது என்றும் கூறினர். மேலும், விக்கிரமசிங்க மீதான சட்ட நடவடிக்கையை அவர்கள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அரசியல் பழிவாங்கல் என்றே வர்ணிக்கிறார்கள்.

விக்கிரமசிங்கவுக்கு எதிரான நடவடிக்கையை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நாட்டின் ஜனநாயக விழுமியங்கள் மீதான பெரும் தாக்குதல் என்று கண்டனம் செய்த அதேவேளை முன்னாள் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ச விக்கிரமசிங்கவின் கைதை அரசியல் பழிவாஙகல் என்று வர்ணித்தார். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கட்டமைத்து வருகின்ற அரசியலமைப் புரீதியான சர்வாதிகாரத்தை தோற்கடிப்பதற்கு கட்சி வேறுபாடுகளை மறந்து எதிர்க்கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என்று அழைப்பு விடுத்திருக்கிறார். கோட்டாபய ராஜபக்ச மாத்திரமே இந்த விவகாரத்தில் பகிரங்கமாக கருத்து எதையும் வெளியிடாமல் இருந்துவரும் முன்னாள் ஜனாதிபதியாவார்.

விக்கிரமசிங்க விவகாரம் ஒரு ஜனாதிபதியின் தனிப்பட்ட விஜயங்களையும் உத்தியோகபூர்வ விஜயங்களையும் வேறுபடுத்திப் பார்க்க முடியுமா என்ற விவாதம் ஒன்றையும் மூளவைத்திருக்கிறது. அவ்வாறு வேறுபடுத்திப்பார்க்க முடியாது என்று விக்கிரமசிங்க கூறியதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீபா பீரிஸ் கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் கூறியிருந்தார்.

தேசிய மக்கள் சக்தி ஃஜே.வி.பி.யின் நிகழ்ச்சிகளுக்கும் அநுராதபுரத்தில் தனது குடும்ப உறுப்பினர்களை சந்திப்பதற்கும் செல்லும் போது ஜனாதிபதி அநுரா குமார திசநாயக்க பாதுகாப்பு பிரிவினர் இல்லாமல் தனது சொந்த வாகனத்தையா பயன்படுத்துகிறார் என்று எதிர்க்கட்சிகள் கேள்வியெழுப்பின.

இதற்கு பதிலளித்த வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் ஜனாதிபதி தனிப்பட்ட தேவைகளுக்காக, குறிப்பாக சுகவீனமுற்றிருக்கும் தனது தாயாரைப் பார்வையிடுவதற்காக நாட்டுக்குள் பயணங்களைச் செய்வதையும் முன்னாள் ஜனாதிபதி வெளிநாடுகளுக்கு விமானங்களில் செல்வதையும் ஒருபோதும் ஒப்பிட முடியாது என்று குறிப்பிட்டார். எதிர்க்கட்சிகள் முடியுமானால் திசநாயக்கவின் உள்நாட்டுப் பயணங்கள் தொடர்பில் நீதிமன்றத்தை நாடட்டும் பார்க்கலாம் என்று ஜே.வி.பி. யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா சவால் விட்டதையும் காணக் கூடியதாக இருந்தது.

தற்போதைய இலங்கை அரசியல் தலைவர்களில் விக்கிரமசிங்கவே சர்வதேச மட்டத்தில் செல்வாக்கும் மதிப்பும் கொண்டவராக கருதப்படுவதால் அவருக்கு எதிரான நடவடிக்கைகளை குறிப்பாக, அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகள் கண்டனம் செய்யும் என்றும் அவரை உடனடியாகவே விடுவிக்க வேண்டும் என்று அரசாங்கத்துக்கு நெருக்குதல்களைக் கொடுக்கும் என்றும் பரவலான எதிர்பார்ப்பு இருந்தது. அவ்வாறு எதுவுமே நடைபெற்றதாக தெரியவில்லை. இலங்கையின் நிகழ்வுப் போக்குகளை அந்த நாடுகள் அவதானித்துக் கொண்டிருந்திருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், வெளிநாடுகளில் இருந்து அவருக்கு சார்பாக பகிரங்கமாக கருத்து வெளியிட்டவர்கள் என்றால் இந்திய காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சஷி தரூரும் இலங்கைக்கான முன்னாள் சமாதானத் தூதுவர் நோர்வேயின் எரிக் சொல்ஹெய்முமேயாவர். விக்கிரமசிங்க பாரதூரமான குற்றச் செயல் எதையும் செய்யவில்லை என்று கூறிய அவர்கள் இருவரும் அவரை உனடியாக விடுதலை செய்யவேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்தினார்கள்.

முன்னாள் ஜனாதிபதியின் கைது தொடர்பில் வெளிநாட்டு தூதரகங்கள் உட்பட சர்வதேச சமூகத்திடமிருந்து நெருக்குதல்கள் வந்ததா என்று அமைச்சரவை செய்தியாளர்கள் மகாநாட்டில் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத்திடம் கேட்கப்பட்டபோது அதற்கு பதிலளித்த அவர் எந்தவொரு வெளிநாட்டு இராஜதந்திரியோ அல்லது இராஜதந்திர அமைப்போ எந்த கருத்தையும் கூறவில்லை என்றும் சில தனிப்பட்டவர்கள் வெளிநாடுகளில் இருந்து வெளியிட்ட கருத்துக்கள் முக்கியத்துவமற்றவை என்றும் குறிப்பிட்டார். கடந்த காலத்தில் தற்போது இலங்கையில் சட்டத்தின் ஆட்சி சமத்துவமான முறையிலும் நேர்மையாகவும் பிரயோகிக்கப்படுகிறது என்பதை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கிறது என்றும் அவர் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதியின் கைதுக்கு வழிவகுத்த சூழ்நிலைகள் குறித்து கொழும்பில் உள்ள பல்வேறு வெளிநாட்டு தூதரகங்களுக்கு ஐக்கிய தேசிய கட்சியின் மூத்த தலைவர்கள் விளக்கிக் கூறியதாகவும் கைது தொடர்பில் மேலதிக விபரங்களை குறிப்பிட்ட சில சர்வதேச அமைப்புக்கள் அவர்களிடம் கோரியதாகவும் கட்சி வட்டாரங்கள் அறிவித்தன.

விக்கிரமசிங்க விவகாரம் தற்போது சிதறிப்போயிருக்கும் எதிர்க்கட்சிகளை ஐக்கியப்படுத்தி அரசாங்கத்துக்கு பெரிய சவாலைத் தோற்றுவிக்கக்கூடிய சாத்தியத்தை எதிர்பார்ப்பதற்கில்லை. முன்னாள் ஜனாதிபதியின் கைதுக்கு உடனடியாக எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் மத்தியில் காணப்பட்ட ஆரவாரம் தற்போது தணிந்து போயிருப்பதாகவே தோன்றுகிறது. எதிர்க்கட்சிகளின் பரந்தளவிலான கூட்டணியொன்றை அமைப்பதற்கு அவற்றை வழிநடத்தக்கூடிய அரசியல் செல்வாக்கும் வல்லமையும் கொண்ட ஏற்புடைய தலைவர் ஒருவர் அவர்கள் மத்தியில் இல்லை. அதேவேளை, கடந்த வாரத்தைய சம்பவங்களுக்கு பிறகு எதிரணி அரசியல் கட்சிகளை ஐக்கியப்படுத்தக்கூடிய ஒரு வலிமையான அரசியல் காரணியாக விக்கிரமசிங்க மாறியிருக்கிறாரா என்பதும் முக்கியமான ஒரு கேள்வி.

இன்றைய எதிர்க்கட்சி அரசியல்வாதிகளில் பெரும்பாலானவர்கள் அவர்களது கடந்தகால முறைகேடான செயற்பாடுகளுக்காக அரசாங்கத்தினால் எளிதாக இலக்கு வைக்கப்படக்கூடிவர்களாக இருக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதனால் தங்கள் மீது சட்டநடவடிக்கைகளை எடுப்பதில் அரசாங்கம் நாட்டம் காட்டாமல் இருப்பதை உறுதி செய்யக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதற்காகவே ஐக்கியப்படுவது குறித்தும் மக்களை அணிதிரட்டுவது குறித்தும் அவர்கள் பேசுகிறார்கள். அத்தகைய அணுகுமுறை மக்களின் ஆதரவைப் பெறுவதற்கான சாத்தியம் குறித்து வலுவான சந்தேகம் எழுகிறது.

அதேவேளை, கடந்த வருடத்தைய தேசிய தேர்தல்களின்போது நாட்டு மக்களுக்கு அளித்த பெருவாரியான வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியிருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முக்கியமான பிரச்சினைகளில் இருந்து கவனத்தை திருப்புவதற்காக முன்னைய ஆட்சியாளர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளில் அக்கறை காட்டுகிறது என்ற விமர்சனமும் இருக்கிறது. விக்கிரமசிங்கவை விடவும் கூடுதலான அளவுக்கு செல்வாக்குடைய பலம்பொருந்திய அரசியல் தலைவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளில் இறங்குவதற்கு முன்னதாக மக்களின் உணர்வுகளை நாடிபிடித்துப் பார்க்கும் ஒரு நடவடிக்கையே அவரின் கைது என்றும் ஊகிக்கப்படுகிறது.

அரசியல் பழிவாங்கலில் இறங்கியிருப்பதாக அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளின் எச்சரிக்கைளை தாங்கள் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை என்று காட்டும் வகையில் நடந்துகொள்ளும் அரசாங்க தலைவர்கள் ஊழல்தனமான அரசியல்வாதி

(14ஆம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றத்துக்கான அரசாங்கத்தின் பயணம் மலினப்படுத்தப்படக் கூடாது !



கலாநிதி ஜெகான் பெரேரா

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டது எதிர்பார்க்கப்படாத ஒன்று. கடந்த வெள்ளிக்கிழமை விசாரணை செய்யப்படுவதற்காக பொலிஸூக்கு சென்றபோது எண்ணற்ற ஏனையவர்களுக்கு நேர்ந்த கதி தனக்கும் நேரும் என்று அவர் நம்பவில்லை என்று தோன்றுகிறது. இறுதியில் கைவிலங்கிடப்பட்ட நிலையில் குற்றவாளிகளை சிறைச்சாலைக்கு ஏற்றிச்செல்வதற்கு பயன்படுத்தப்படும் வாகனத்தில் கூட்டிச் செல்லப்பட்டார். எதிர்பாராத உணர்வதிர்ச்சியின் விளைவாக விக்கிரமசிக்க தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் இருக்கிறார்.



இந்த 'நாடகம்' பெருமளவு சர்ச்சையையும் மனவேதனையையும் ஏற்படுத்தியிருக்கிறது. முன்னாள் ஜனாதிபதி பொருளாதார வீழ்ச்சியில் இருந்தும் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் ஏற்படவிருந்த அரசியல் குழப்பநிலையில் இருந்தும் நாட்டைக் காப்பாற்றிய தலைவராக பலரால் நோக்கப்படுகிறார்.

முன்னாள் ஜனாதிபதிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள், அவருக்கும் மனைவிக்கும் பத்துப்பேர் கொண்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் அதிகாரிகள் குழுவினருக்குமான விமானப் பயணச் செலவு, தங்குமிடவசதி மற்றும் ஏனைய செலவினங்களுக்காக ஒரு கோடி 69 இலட்சம் ரூபா அரசாங்கப் பணத்தை துஷ்பிரயோகம் செய்ததுடன் தொடர்புடையவை என்று செய்திகள் கூறுகின்றன.

இந்த தவறு ஜனாதிபதிஅவரது குழுவினருடன் ஐக்கிய இராச்சியத்துக்கு மேற்கொண்ட தனிப்பட்ட ஒரு விஜயத்தை மையமாகக் கொண்டதாகும். அந்த குழுவில் ஐவர் முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்புக்கு பொறுப்பாக இருந்த பாதுகாப்பு படைகளைச் சேர்ந்தவர்கள். அவர்கள் கியூபாவுக்கும் அமெரிக்காவுக்கும் உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொண்ட பிறகு நாடுதிரும்பும் வழியில் விக்கிரமசிங்கவின் மனைவிக்கு பல்கலைக் கழகம் ஒன்று கௌரவப் பேராசிரியர் பட்டம் வழங்கும் வைபவத்தில் கலந்து கொள்வதற்காக லண்டனுக்கு சென்றனர்.

உயர்மட்டத்தில் இருப்பவர்கள் தொடங்கி கீழ்மட்டத்தில் உள்ளவர்கள் வரை அரசாங்க உறுப்பினர்களினால் அரசாங்க வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவது என்பது சுதந்திரத்துக்கு பின்னரான இலங்கையின் வரலாற்றில் ஒரு இயல்பான போக்காகவே இருந்துவருகிறது. காலப்போக்கில் அந்த பிரச்சினை மேலும் அதிகரித்து வந்திருக்கிறது.

ஒரு காலத்தில் பத்து சதவீதம் தரகுப் பணம் கேட்டதாக நம்பப்படும் அரசாங்க தலைவர்கள் நாளடைவில் அதை விடவும் பல மடங்கு பணத்தை கோரும் அளவுக்கு முறைகேடுகள் பெரும் பாய்ச்சலைக் கண்டன. அரசாங்க சொத்துக்கள் துஷ்பிரயோகத்துக்கு எதிரான சட்டத்தின் கண்டிப்பான பிரயோகம் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட முதன் முதலான முன்னாள் அரச தலைவர் என்ற அபகீர்த்திக்கு உள்ளாக்கி விட்டது.

2022 ஆம் ஆண்டில் தேசிய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து அரசாங்கம் சர்வதேச வங்குரோத்து நிலையைப் பிரகடனம் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டபோது அரசாங்க வளங்கள் அரசாங்க உறுப்பினர்களினால் விரயம் மற்றும் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்ற பிரச்சினை முன்னரங்கத்துக்கு வந்தது. பொருட்களுக்கு தட்டுப்பாடும் மும்மடங்கு விலை அதிகரிப்பும் ஏற்பட்டதை அடுத்து அரசாங்க வளங்கள் விரயம் மற்றும் ஊழலுக்கு எதிராக மாபெரும் மக்கள் போராட்டங்கள் மூண்டன. அறகலய போராட்டம் என்பது வெறுமனே பொருட்கள் தட்டுப்பாட்டுடனும் எரிபொருட்களை வாங்குவதற்கு மக்கள் நீண்ட வரிசைகளில் காத்துநின்றதுடனும் சம்பந்தப்பட்டது அல்ல. சட்டத்துக்கு அஞ்சாமல் அரசியல்வாதிகள் செய்துவந்து முறைகேடுகள், தங்களது வாழ்க்கைத் தரங்களின் வீழ்ச்சி காரணமாக மக்களுக்கு விரக்தியின் விளைவானதே அந்த போராட்டம்.

**அடுத்த மாதம் போர்க் குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு ஜெனீவா ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் பதிலளிக்க வேண்டியிருக்கிறது. அங்கேயும் கூட ஆக்கபூர்வமான விளைவுகளை பெறக்கூடியதாக சமநிலையான அணுகுமுறை ஒன்றை கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும்.**

தேசிய மக்கள் சக்தி ஆட்சியதிகாரத்துக்கு வந்த பிறகு ஊழல் மற்றும் அரச வளங்கள் துஷ்பிரயோகம் தொடர்பில் பல முன்னாள் அரசாங்க உறுப்பினர்களுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் எதிராக வழக்குகள் தொடுக்கப்பட்டு அவர்கள் நீதிமன்றங்களினால் சிறைக்கு அனுப்பப்பட்டு வருகிறார்கள். ஊழலற்ற நாட்டை உருவாக்குவதாக தேர்தல் விஞ்ஞாபனத்தில் நாட்டு மக்களுக்கு தேசிய மக்கள் சக்தி அளித்த வாக்குறுதிகளில் அரசாங்கம் கொண்டிருக்கும் உறுதிப்பாட்டின் வெளிப்பாடே இதுவாகும். அந்த வாக்குறுதிகளுக்காகவே மக்கள் தேசிய மக்கள் சக்தியை அதிகாரத்துக்கு கொண்டுவந்தார்கள்.

முன்னாள் ஜனாதிபதியை கைதுசெய்து விளக்கமறியலில் வைத்ததன் மூலமாக பொதுவாழ்வில் உயர்ந்த மட்டங்களில் பொறுப்புக் கூறும் கடப்பாட்டை உறுதிசெய்வதற்காக முன்னாள் தலைவர்களை சிறையில் அடைத்த குறிப்பிட்ட சில நாடுகள் குழுவில் இலங்கையும் இணைந்து கொண்டுள்ளது. உதாரணமாக, பிரான்சில் ஊழல் செய்ததாக குற்றவாளியாகக் காணப்பட்ட முன்னாள் ஜனாதிபதி நிக்கலஸ் சார்கோசி 2021 ஆம் ஆண்டில் சிறைக்கு பதிலாக வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார். இத்தாலியில் பல பதவிக் காலங்களுக்கு பிரதமராக இருந்த சில்வியோ பெரலுஸ்கோனி வரி ஏய்ப்புச் செய்ததாக 2013 ஆம் ஆண்டில் குற்றவாளியாகக் காணப்பட்டார். அவரது வயது மூப்பு மற்றும் உடல்நிலை காரணமாக அவர் சிறைவாசத்துக்கு பதிலாக சமூக சேவை ஊடாக தண்டனையை அனுபவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி விக்கிரமசிங்க விளக்கமறியலில் வைக்கப்பட்டதற்கான குற்றச்சாட்டு நீதிமன்றத்தில் நிரூபிக்கக் கூடியதா என்ற கேள்வி இருக்கிறது. உயர் மட்ட நிருவாகிகள் தங்களது பதவிநிலையின் ஒரு பகுதியாக தனிப்பட்ட பயணங்களையும் அடிக்கடி செய்ய வேண்டிய நிலை இருக்கிறது.

குறிப்பிட்ட இந்த வழக்கில் அமெரிக்காவில் இருந்து நாடுதிரும்பும் வழியில் முன்னாள் ஜனாதிபதி தனது குழுவினருடன் லண்டனில் இரு நாட்கள் தங்கியிருந்தார். அந்த லண்டன் விஜயம் முதலில் தனிப்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பிறகு உத்தியோகபூர்வ விஜயம் என்று மாற்றப்பட்டது. அவரது மனைவிக்கு கௌரவ பேராசிரியர் பட்டத்தை வழங்கிய பல்கலைக்கழகம் அனுப்பிய அழைப்பு உத்தியோகபூர்வமானதா அல்லது தனிப்பட்டதா என்பதும் பதவியில் இருக்கும் ஜனாதிபதி ஒருவர் தனக்கு பாதுகாப்பு வழங்கும் குழுவினர் இல்லாமல் தனிப்பட்ட விஜயத்தை மேற்கொள்ள முடியுமா அல்லது அதற்கான செலவை அவர் செலுத்த வேண்டுமா என்பதும் முக்கியமான கேள்விகள்.

உத்தியோகபூர்வ விவகாரங்களையும் தனிப்பட்ட விவகாரங்களையும் கையாளுகின்ற நடைமுறை நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. அமெரிக்காவில் பதவியில் இருக்கும் ஜனாதபதிகளும் முன்னாள் ஜனாதிபதிகளும் மேற்கொள்கின்ற விஜயங்கள் தனிப்பட்ட ரீதியிலானவையாக இருந்தாலென்ன, உத்தியோகபூர்வமானவையாக இருந்தாலென்ன பயணச் செலவையும் பாதுகாப்பு செலவையும் அரசாங்கமே அவர்களின் வாழ்நாள் பூராவும் பொறுப்பேற்கிறது.

மற்றைய நாடுகளில் ஜனாதிபதியோ அல்லது அரச தலைவரோ வெளிநாடுகளுக்கு தனிப்பட்ட விஜயங்களை மேற்கொள்ளும்போது அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுகின்ற பாதுகாப்பு ஏற்பாடுகளை பெறவேண்டியிருக்கிறது. அவர்களின் தனிப்பட்ட தங்குமிடவசதி, குடும்பத்தவர்களுக்கான செலவுகள் மற்றும் பாதுகாப்பு சாராத தூதுக்குழுவினரின் செலவுகளை தனிப்பட்ட முறையில் அவர்கள் பொறுப்பேற்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதே வழமையாகும். இந்த செலவினங்களுக்காக அரச நிதி செலவிடப்பட்டால், அதை அவர்கள் திருப்பிச் செலுத்த வேணடும் அல்லது பொதுவெளியில் அது விபரங்கள் தெரிய வேண்டும்.

இலங்கையை பொறுத்தவரை, தனிப்பட்ட விஜயங்கள், உத்தியோகபூர்வ விஜயங்கள், அவற்றுக்கான செலவினங்கள் பற்றிய கோட்பாடுகளில் தெளிவு இல்லையானால், கடந்த கால தவறுகள் மீண்டும் இடம்பெறாமல் இருப்பதை உறுதிசெய்வதற்காக அவை குறித்து விரிவாக ஆராயப்பட வேண்டும். குறிப்பாக, ஜனாதிபதி பதவியை பொறுத்தவரை, அது உயர்ந்த மட்ட அதிகாரங்களையும் தண்டனை விலக்குகளையும் கொண்டதாக இருப்பதால், வாதத்துக்கு இடமான ஒப்பீட்டளவில் சிறிய நிருவாக விவகாரங்களை அந்த பதவியிடம் ஒப்படைக்கக்கூடாது. இலங்கையின் ஊழல்தனமான அரசியல் காலாசாரத்தை மாற்றியமைத்து பொருளாதார மற்றும் தார்மீக வளர்ச்சிக்கான பாதையை வகுக்கும் மேன்மையான ஒரு பயணத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இறங்கியிருக்கிறது.

அரசாங்கம் அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கிய வாக்குறுதிகள் மற்றும் மக்களின் ஆணையின் பிரகாரம் முன்னெடுக்கின்ற ஊழலுக்கும் விரயத்துக்கும் எதிரான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதுடன் நிலைபேறானவையாகவும் இருக்க வேண்டியது முக்கியமானதாகும். இதற்கு வாதத்திற்குரிய நடவடிக்கைகளை எடுத்து நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தாமல் கருத்தொருமிப்பையும் மக்கள் ஆதரவையும் கட்டியெழுப்ப வேண்டியது அவசியமானதாகும். சர்வதேச சூழமைவுகளையும் கருத்தில் எடுக்க வேண்டும்.

அடுத்த மாதம் போர்க் குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு ஜெனீவா ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் பதிலளிக்க வேண்டியிருக்கிறது. அங்கேயும் கூட ஆக்கபூர்வமான விளைவுகளை பெறக்கூடியதாக சமநிலையான அணுகுமுறை ஒன்றை கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும். நீதிக்கான எமது தேடல் பரிவிரக்கத்துக்கு இடமளிப்பதை உறுதிசெய்ய வேண்டியதும் பொறுப்புக்கூறலுக்கான கோரிக்கை எம்மைப் பிளவுபடுத்தாமல் தேசிய அபிவிருத்தியை வலுப்படுத்துவதாக அமைவதை உறுதிசெய்ய வேண்டியதுமே இலங்கை முன்னால் இன்றுள்ள சவால்களாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்திசாலிக் காகம் நரியை ஏமாற்றியதை ஒத்திகை என்றால்...!

பனங்காட்டான்



**வடை கேட்ட நரியிடம் காகம் ஒன்று ஏமாந்தது பழைய கதை. நவீன காலக் காகம் வடையைக் காலுக்குள் வைத்துக் கொண்டு நரியை ஏமாற்றியது புதுக்கதை. ரணிலின் கைதையும் விளக்கமறியலையும் நவீன காலக் காகத்துடன் பொருத்திப் பார்க்கலாம். முதல் ஒத்திகையின் வெற்றி இதனை தொடர்கதையாக்குமா?**




ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையின் அறுபதாவது கூட்டத்தொடர் அடுத்த ஒரு வாரத்தில் - செப்டம்பர் 8ம் திகதி ஆரம்பமாகி அக்டோபர் 8 வரை இடம்பெறவுள்ளது. முன்னர்போல இம்முறையும் இலங்கை தொடர்பான தீர்மானம் புதுப்பிக்கப்படவுள்ளது.

மனித உரிமைகள் பேரவை என்பது விசாரணை செய்து உண்மையை அறிந்து நீதி வழங்கும் மன்றல்ல எனினும், விடயத்தை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்ல வழிகாட்டும் என்ற நம்பிக்கையே இத்தீர்மானங்களில் கவனம் செலுத்த வைக்கிறது.

இலங்கைத் தமிழரைப் பொறுத்தளவில் கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக, நம்பிக்கையீனங்கள் மத்தியிலும் நம்பிக்கையின் எதிர்பார்ப்பில் தீர்மானங்கள் பார்க்கப்படுகின்றன. இந்தப் பின்னணியில் தமிழ் அரசியல் கட்சிகளும், தமிழரின் சிவில் அமைப்புகளும் தொடர்ந்து கடிதங்களையும் சமர்ப்பணங்களையும் அனுப்பி வருகின்றன.

ஜெனிவா விடயத்தில்கூட தாங்கள் ஒன்றுபட மாட்டோம் என்பதை சிங்கள அரசுக்கு மட்டுமன்றி சர்வதேசத்துக்கும் ஜெனிவா ஊடாக தமிழ் தலைவர்கள் தொடர்ந்து காட்டி வருகின்றனர். இதன் அடையாளமே இவர்கள் தனித்தனியாக அனுப்பும் கடிதங்கள். பேரவையின் ஆணையாளர் சில வாரங்களுக்கு முன்னர் இங்கு வருகை தந்து பலரையும் சந்தித்து, சித்துப்பாத்தி மனிதப் புதைகுழிக்குச் சென்றிருந்த போது இதனை அறிந்திருப்பார்.

செப்டம்பர் 8ல் ஆரம்பமாகும் அமர்வில் புதிய வரைபு தீர்மானமாக வைக்கப்படும். வழமைபோன்று இலங்கை அரசு அனைத்தையும் மறுதலிக்கும். இலங்கையில் ஆட்சி மாறினாலும் சிங்கள ஆட்சியே தொடருகிறது என்பதை நிரூபிக்கும் வகையில், படையினரைப் பாதுகாப்பதிலும் சர்வதேச பொறிமுறை விசாரணையை நிராகரிப்பதிலும் அவர்கள் அசையாது செயற்படுகிறார்கள்.

ஜெனிவா என்பது ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரையில் 2009 முள்ளிவாய்க்காலுக்குப் பின்னர் திறக்கப்பட்ட கதவு. சிங்கள தேசத்தைப் பொறுத்தளவில் இதனை முதன்முதலாக தள்ளித் திறந்தவர் மகிந்த ராஜபக்ச. பிரேமதாசவின் ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் ஜே.வி.பி. இளைஞர்களும் ஆதரவாளர்களும் படுகொலை செய்யப்பட்டதை வெளியுலகத்துக்கு எடுத்துச் செல்லும் நீதி விசாரணைக்காக 1990 - 1991களில் ஜெனிவா மனித உரிமைப் பேரவைக்கு எடுத்துச் சென்றவர் இவரே. அந்த நாட்களை மகிந்த - ஜே.வி.வி.யின் தேநிலவுக் காலமென அரசியல் அரங்கில் அழைப்பர்.

அன்று தனது நடவடிக்கைகளை தேசப்பற்று என்று கூறிய இவரே, 2009 முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு ஜெனிவா நோக்கிச் சென்றவர்களைப் பார்த்து தேசத்துரோகிகள் என்று பட்டம் சூட்டியவர். அத்துடன் இலங்கை தொடர்பாக ஜெனிவாவில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை வன்மையாக எதிர்த்தவரும் இவரே. 2004 - 2008 காலப்பகுதியில் மனித உரிமைகள் பேரவை ஆணையாளராகவிருந்த கனடிய நீதியரசரான லூயிஸ் ஆர்பரை வெள்ளைத்தோல் புலி எனவும், 2008 - 2014 காலத்தில் ஆணையாளராகவிருந்த நவநீதம்பிள்ளையை தமிழ்ப்புலி என்றும் நாமம் சூட்டியவர்கள் மகிந்தவும் அவரது அணியினருமே.

சிலி நாட்டின் முன்னாள் ஜனாதிபதியான மிச்சேல் பச்சலற் அம்மையார் 2018ல் மனித உரிமைகள் ஆணையாளராக நியமனமானதையடுத்து வெளியிட்ட முக்கிய அறிக்கைகள் இலங்கை மீதான கடுமையான நடைமுறைகளை மேற்கொள்ளும் தீர்மானங்களுக்கு வழிவகுத்ததாயினும் இறுதியில் எதனையுமே நிலைநாட்ட முடியாது போய்விட்டது.

இப்போது அரியாலை சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியிலிருந்து மீட்கப்படும் காணாமற்போனோரின் எலும்புக்கூடுகளும் எச்சங்களும் இனப்படுகொலையின் மறக்க முடியாத சாட்சிகளாகவுள்ளன. இதனை தற்போதைய அநுர குமர அரசும் நன்கறியும். இந்த விடயம் ஜெனிவாவில் முக்கியமானதாக பிரஸ்தாபிக்கப்படும் என்பதும் இவர்கள் அறிவர்.

இதன் காரணமாகவே சித்துப்பாத்தி மனிதப்புதைகுழி அகழ்வை மறுக்காமலும் மறைக்காமலும் சட்டரீதியாக பூரண ஆதரவு வழங்குவதாக வெளியுலகுக்கு காட்ட வேண்டிய நிர்ப்பந்தம் இவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. ஜெனிவாவின் அறுபதாவது அமர்வு முடிவடைந்த பின்னரே அநுர குமர [illegible] என்ன முடிவெடுக்கும் என்பது தெரியவரும்.

புதைகுழிகளை ஆழமாக்க ஸ்கானர் வழங்குவதும், நீதிமன்றம் ஊடாக தேவையான பாதுகாப்பை வழங்குவதும், அமைச்சர்கள் நேரடியாகச் சென்று புதைகுழியை பார்வையிடுவதும், செப்டம்பர் முதலாம் திகதி ஜனாதிபதி யாழ்ப்பாண விஜயத்தின் போது இவ்விடத்தைச் சென்று பார்வையிடக்கூடும் என்று அறிவிப்பதும் நீதி [illegible] என்பதன் அர்த்தமாகாது. அவ்வாறு எடுத்துக் கொள்ளவும் முடியாது. அப்பாவி மனிதர்களின் எச்சங்களை அடையாளம் காணவும், கொலைஞர்களைக் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்கவும் சர்வதேச உதவி அவசியம். இதனையே இப்போது பாதிக்கப்பட்ட சமூகம் கேட்கிறது.

சர்வதேச நீதிப் பொறிமுறையிலிருந்து தப்புவதற்காகவே ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்து நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தியதாக பலத்த சந்தேகம் ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதியாக இருந்த ஒருவரையே அவர் இழைத்த குற்றத்துக்காக உள்நாட்டு நீதிப்பொறிமுறை வழியாக அவரைக் கைது செய்து விளக்கமறியலில் வைத்தது என்றால், தமிழினப் படுகொலைக்கும் இதே உள்நாட்டுப் பொறிமுறையில் நீதி வழங்க முடியாது என்று எதற்காக சந்தேகப்பட வேண்டுமென்ற கருத்தை இதனூடாக அரசாங்கம் மெதுவாக பரவ விட்டுள்ளது என்பதை மறுக்க முடியாதுள்ளது.

ரணிலின் மீதான குற்றப்பத்திரிகை இதுவரை முழுமையாக பகிரங்கப்படுத்தப்படவில்லை. இவர் மீதான குற்ற விசாரணை எப்போது ஆரம்பமாகி எப்போது முடிவடைந்து, எவ்வகையான தண்டனை வழங்கப்படுமென்பதும் எவருக்கும் தெரியாது. சில சமயம் இவர் குற்றமற்றவர் எனக்கூறி நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்படலாம்.

ஓரிரவு கூட சிறைச்சாலையில் தங்கியிருக்காது, மருத்துவமனை படுக்கையில் அதிமிகு பராமரிப்பில், வீட்டிலிருந்து வந்த உணவை உட்கொள்ள அனுமதிக்கப்பட்ட இவர், நான்காம் நாள் பிணை கிடைத்ததும் எழுந்து வீடு சென்றுள்ளார். வழக்கமாக அரசியல்வாதிகளுக்கு விளக்கமறியலில் வைக்கப்படும்போது வரும் நோய்களும் மருத்துவ உதவிகளும் இவருக்கும் வந்தன.

கைது செய்யப்படும்வரை அரசியலில் தீவிரமாக இயங்கி வந்ததோடு ஜே.வி.பி. அரசை விமர்சித்து வந்த இவருக்கு விளக்கமறியல் தீர்ப்பு வந்ததும் நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இருதய அடைப்பு என்ற பட்டியலை மருத்துவர்களும் வழக்கறிஞர்களும் வெளியிட்டனர். இவ்வாறான பயங்கர நோய்களுடைய ரணிலால் இனி அரசியலில் செயற்பட முடியாதென நையாண்டி செய்ய வைத்துள்ளது இந்த மருத்துவ அறிக்கை.

அநுர குமர அரசாங்கத்தை 'எல் போட்' என கேலி பண்ணியவருக்கு அந்த எல் போட் தனது பலத்தைக் காட்டியுள்ளது. சர்வதேச புகழ்பெற்ற ஒரேயொரு இலங்கை அரசியல்வாதியென வர்ணிக்கப்படும் ரணிலுக்கு உள்நாட்டில் செல்வாக்கு இல்லையென்பதை கடந்த கால தேர்தல்கள் மட்டுமன்றி அவரது விளக்கமறியல் காலமும் எடுத்துக் காட்டியுள்ளது. இதுவரை அவரது கைதைக் கண்டித்து நாடளாவிய ரீதியில் எந்தவொரு ஆர்ப்பாட்டமோ, அரசுக்கெதிரான போராட்டமோ இடம்பெறவில்லை என்பது தெரியவந்துள்ளது. மேலும் பல தலைகளை கைது செய்வதற்கான ஒத்திகை அநுர குமர அரசுக்கு ஒரு நம்பிக்கையளித்துள்ளதென அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிடுகின்றனர்.

கோதபாய ராஜபக்ச, மகிந்த ராஜபக்ச குடும்பத்தில் இருவர் அல்லது மூவர், சஜித் பிரேமதாசவும் மனைவியும் கைது வலையில் இருப்பவர்களென ஊடகங்கள் எழுத ஆரம்பித்துவிட்டன. ரணில் விக்கிரமசிங்கவின் கைதையும் விளக்கமறியலையும் ஒரு சமூக ஊடகமே முற்கூட்டி அறிவித்தது என்பதைப் பார்க்கும்போது, இதுபோன்ற ஊடக அறிவிப்புகளை தவிர்க்க முடியாதுள்ளது. இதனை எவராலும் மறுக்கவும் முடியாதுள்ளது.


வடை கேட்ட நரியிடம் காகம் ஒன்று ஏமாந்தது பழைய கதை. நவீன காலக் காகம் வடையைக் காலுக்குள் வைத்துக் கொண்டு நரியை ஏமாற்றியது புதுக்கதை. ரணிலின் கைதையும் விளக்கமறியலையும் நவீன காகத்துடன் பொருத்திப் பார்க்கலாம். முதல் ஒத்திகையின் வெற்றி இதனை தொடர்கதையாக்குமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவில் சொந்த வீட்டில் தூங்க முடியாமல் தவிக்கும் மக்கள்:

# மன்னாரில் என்ன நடக்கிறது?

ரஞ்சன் அருணி பிரசாத்



'இந்த காற்றாலையால் பிள்ளைகளுக்கு ஏதாவது ஏற்பட்டு விடுமோ என்ற பீதியான நிலைமை தான் இப்போது இருக்கின்றது. 62 வயதான எங்களுக்கே இப்படியான நிலைமை என்றால், சின்ன சின்ன பிள்ளைகள் எங்களுடைய வயது வரும் வரை வளர்வார்களா? என்ற ஒரு கேள்விக்குறி இருக்கின்றது. சின்ன சின்ன பிள்ளைகளுக்கு இடையில் காது கேட்காத நிலைமை வந்து விட்டது. அவர்களுக்கு வடிவாக படிக்க இயலாது. நாங்கள் அனுபவித்ததை அவர்கள் அனுபவிப்பார்களா?" என்று எம்மோடு பேசிய மன்னாரைச் சேர்ந்த 62 வயதான அருணேசன் யோகமலர் தெரிவித்தார்.

மன்னார் - நறுவிலிக்குளம் பகுதியில் சில காற்றாலை மின்சார விசிறிகள் பொருத்தப்பட்டு செயற்பட்டு வருகின்றன. காற்றாலை மின்சார விசிறிகளுக்கு அருகிலுள்ள வீடுகளில் வாழும் தாம் மிகுந்த துயரங்களை அனுபவித்து வருவதாக நறுவிலிக்குளம் மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

நறுவிலிக்குளம் பகுதியில் இரவு வேளைகளில் காற்றின் வேகம் அதிகரித்து காணப்படுகின்றமையினால், மின்சார உற்பத்தி செய்யும் விசிறிகளின் வேகமும் அதிகரித்து காணப்படுகின்றன.

இதனால், இரவு வேளைகளில் தமக்கு தூக்கமின்மை காணப்படுவதாக தெரிவித்து, கர்ப்பிணித் தாய்மார்கள், சிறு குழந்தைகள் மற்றும் அவர்களின் தாய் தந்தையர்கள், முதியவர்கள் மற்றும் நோயாளர்கள் அங்கிருந்து நாளாந்தம் வெளியேறி தமது உறவினர்களின் வீடுகளுக்குச் செல்கின்றனர்.

இரவு வேளைகளில் உறவினர்களின் வீடுகளுக்கு செல்லும் இவர்கள், பகல் வேளையில் மீண்டும் வீட்டிற்கு திரும்புவதை வழமையான நடவடிக்கையாக கொண்டுள்ளனர்.

நிம்மதியான தூக்கத்திற்காக இவ்வாறு நாளாந்தம் தனது மகனின் வீட்டிற்கு செல்லும் அருணேசன் யோகமலரின் கதையே இது.

'எங்கள் மீனவ சங்க ஆட்கள் மற்றும் வீட்டுக்கார ஆட்கள் சென்று பேசினார்கள். அம்மா இயலாமல் இருக்கின்றார். இரண்டு குழந்தைகளும் நித்திரை கொள்ளுதில்லை. இந்த சத்தத்தை குறைத்தோ இல்லாது செய்தோ ஏதோ செய்யுங்கள் என்று சொன்னார். சரி நாங்கள் ஏதாவது செய்கின்றோம் என்று சொன்னார்கள். அன்றிரவு அங்கு வேலை செய்கின்ற பெரியவர்கள் வந்தார்கள். என்னை பார்த்தார்கள். ஏன் முதலில் சொல்லவில்லை என்று கேட்டார்கள். நாங்கள் ஏதாவது உதவி செய்திருப்போமே என்று சொன்னார்கள். என்னுடைய மகன் சொன் னார். எங்களுக்கு உதவி தேவையில்லை. எங்களிடம் எல்லாம் இருக்கின்றது. நாங்கள் யாருடைய உதவியையும் எதிர்பார்க்கவில்லை. அம்மாவிற்கு சுகம் கிடைக்க வேண்டும். அது தான் எங்களுக்கு முக்கியம். இதற்கு ஏதாவது வழி செய்ய வேண்டும். இந்த சத்தங்கள் வரக்கூடாது என்று மகன் சொன்னார்." என அவர் குறிப்பிடுகின்றார்.

'நாங்கள் இந்த வேலைகளை ஆரம்பித்து விட்டோம். அதனால் ஒன்றுமே செய்ய முடியாது. அம்மாவிற்கு பாதுகாப்பு என்றால், உங்கள் வீட்டில் கண்ணாடி அறையொன்று செய்து, ஏ.சியை பொருத்தி தாறோம். அம்மாவை நீங்கள் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள்.' என்று கூறினர். என் மகன் அதனை வேண்டாம் என்று சொல்லிவிட்டான் என அவர் கூறுகின்றார்.

தனது சொந்த இடமான நறுவிலிக்குளத்தில் வாழ முடியாமல் யாழ்ப்பாணத்திற்கு சென்று அங்கு தங்கியிருந்தே சிகிச்சைகளை பெற்று நோயை ஓரளவு குணப்படுத்திக் கொண்டதாக அருணேசன் யோகமலர் குறிப்பிடுகின்றார்.

2023-ஆம் ஆண்டு நடுப் பகுதியிலேயே தாம் மீண்டும் யாழ்ப்பாணத்திலிருந்து தனது சொந்த ஊரான நறுவிலிக்குளம் பகுதிக்கு வந்த போதிலும், இங்கு நிம்மதியான பழைய வாழ்க்கையை வாழ முடியவில்லை என அவர் கூறுகின்றார்.

அதனால், சிறிது காலம் 15 கிலோமீட்டர் தொலைவிலுள்ள தனது தாயின் வீட்டில் வாழ்ந்து வந்ததாகவும், சில காலமாகவே மீண்டும் சொந்த இடத்தில் வாழ்ந்து வருவதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

எனினும், தனக்கு பழைய வாழ்க்கையை மீண்டும் வாழ முடியாத சூழ்நிலை இங்கு காணப்படுவதாக மன்னார் - நறுவிலிக்குளம் பகுதியைச் சேர்ந்த அருணேசன் யோகமலர் கூறுகின்றார்.

' எனக்கு நான்கு பேரப்பிள்ளைகள் இருக்கின்றார்கள். அவர்கள் எல்லாம் இங்கு இருப்பதில்லை. இடம்பெயர்ந்து இருக்கின்றார்கள். இரவில் படுக்கமாட்டார்கள். அப்படி படுக்கப் போட்டாலும் எழும்பி எழும்பி கத்திக் கொண்டிருப்பார்கள். காதுகள் எல்லாம் கேட்காத மாதிரி இருக்கின்றது.' என அருணேசன் யோகமலர் தெரிவிக்கின்றார்.




காற்றாலை மின்சார உற்பத்தி விசிறிகளினால் ஏற்படும் தனிப்பட்ட பாதிப்புகள் தொடர்பிலும் அருணேசன் யோகமலர் தெளிவுப்படுத்தினார்.

'சத்தம் தொடங்கினால் இருக்க இயலாது. அந்த நேரத்தில் என்ன செய்வது என்று தெரியாது. வெளியில் வந்து இப்படி தோட்டங்கள் செய்துக் கொண்டிருப்பேன். சில நேரத்தில் கோவில்களுக்கு சென்று இருப்பேன். அந்த சத்தத்தை கேட்க இயலாது. காற்றாலையை நிறுத்தும் நேரத்தில் பாரிய சத்தமொன்று கேட்கும். அந்த நேரம் படப்படப்பாக இருக்கும்." என அருணேசன் யோகமலர் கூறினார்.

மன்னார் காற்றாலை திட்டத்தை நிறுத்துமாறு வலியுறுத்தி மன்னார் மாவட்ட மக்கள் சுழற்சி முறையிலான தொடர் போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

மன்னார் தீவுப் பகுதியில் 36 காற்றாலைகள் தற்போது இயங்கி வருகின்ற நிலையில், தொடர்ந்தும் புதிய காற்றாலைகளை பொருத்த வேண்டாம் என வலியுறுத்தியே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

புதிய காற்றாலைகளை பொருத்துவதற்கான ஆயத்தங்கள் இந்த மாத முற்பகுதியில் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன்படி, புதிய காற்றாலைகளை பொருத்தும் நோக்கில் மன்னார் நகருக்குள் பாரிய லொறிகளில் பொருட்கள் கொண்டு வரப்பட்ட பின்னணியில், அதனை நகருக்குள் செல்ல விடாது பிரதேச மக்கள் இரவு இரவாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், காற்றாலை திட்டத்தை முன்னெடுக்கும் நடவடிக்கைக்கு நீதிமன்றம் தற்காலிக தடை விதித்துள்ளது.

எனினும், மன்னார் நகருக்குள் கொண்டு விடாது தடுத்து வைக்கப்பட்ட பொருட்களை மாத்திரம், நகருக்கு கொண்டு செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளதை அடுத்து, அந்த பொருட்கள் நகருக்குள் கொண்டு செல்லப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மன்னார் மாவட்ட மக்கள் மன்னார் நகர் மத்தியில் சுழற்சி முறையிலான தொடர் போராட்டத்தை ஆரம்பித்து 20 நாட்கள் கடந்தும் முன்னெடுத்து வருகின்றனர்.

**போராட்டக்காரர்கள் கூறுவது என்ன?**

மன்னார் நகரில் தொடர் சுழற்சி முறை போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பொதுமக்கள், இந்த விடயம் தொடர்பில் தமது கருத்துக்களை பகிர்ந்துக்கொண்டனர்.

'காற்றாலை மின்சாரத்தின் மண் அகழ்வு காரணமாக மழை காலங்க ளில் வெள்ளப் பாதிப்பு ஏற்ப டுகின்றது. அதனால், எங்க ளுடைய வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகின்றது. கனிய மண் அகழ்வதனாலும், காற் றாலை நிறுவுவதனாலும் பாரிய பள்ளங்கள் ஏற்படுத்தி, அதனை மூடுவதனால் மழை காலங்களில் வெள்ள நீர் வடிந் தோடாது எங்களுடைய காணிகள் தேங்கி நிற்கின்றது" என சிறிதரன் அந்தோணி அம்மாள் தெரிவிக்கின்றார்.


'இந்த காற்றாலையை பற்றி எங்களுக்கு முன்னாடி தெரியாது. கொண்டு வந்து பூட்டினார்கள். இப்போது சொல்லும் போது தான் தெரிகின்றது எங்களுக்கு எவ்வளவு பாதிப்பு என்று. சுற்று சூழல் எல்லாம் பாதிப்பாக இருக்கின்றது. கடற்றொழிலுக்கு போறவங்க, வெறும் கையில் வரும் போது எங்களுக்கு சரியான கவலையாக இருக்கின்றது. அதை வைத்து தான் அவர்களின் வாழ்வாதாரம் நடக்குது. பிள்ளைகளின் படிப்பு எல்லாம் பாதிக்கின்றது. அத் திப்பட்டி கிராமம் அழிந் தது மாதிரி, எங்களுடைய மன்னார் மாவட்டமும் அழிய கூடாது' என மன் னாரைச் சேர்ந்த ரோகினி குறிப்பிடுகின்றார்.

'எங்களுடைய மன்னார் மாவட்டம் மூன்று விதமான பொருளாதாரத்தை கொண்டிருக்கின்றது - கடல் வளம், விவசாயம், பனை உற்பத்தி. இது மூன்றுமே பாதிக்கப்படுகின்றது. 100 அடி ஆழத்திற்கு கீழ் காற்றாலை அமைப்பதற்கு கிடங்கு எடுக்கின்றீர்கள். அந்த மண்ணையும் நீங்கள் கொண்டு போய் விடுகின்றீர்கள். நிலம் வந்து கொத்தும் போது அது அதிர்வாகிவிட்டால், அதை திரும்ப பழைய நிலைமைக்கு வராது. மன்னாரில் தான் கடலுக்கு பக்கத்தில் நல்ல தண்ணீரும் இருக்கின்றது. இப்போது அந்த தண்ணீரே மாசடைந்து விட்டது. இங்கு பெயர் சொல்லும் அளவிற்கு இருந்தது முருங்கை உற்பத்தி, ஆனால் இப்போது முருங்கை உற்பத்தியே வருதில்லை. காற்றாலைகளை அமைக்கும் போது 100 அடிக்கு தோண்டப்படுகின்றது. அதனால், வெள்ளம் ஊருக்குள் வருகின்றது. எனக்கு 40 வயதாகின்றது. நாங்கள் இதுவரை வெள்ளம் பார்த்ததில்லை. ஆனால், இப்போது வெள்ளத்தை பார்க்கின்றோம். ஏன்? இந்த காற்றாலை அமைத்ததனால். வெறும் 75000 மக்கள் தான் இந்த மன்னார் தீவில் இருக்கின்றோம். இதுவரை மன்னார் தீவை யாரும் கணக்கெடுக்கவில்லை. இப்போது இவ்வளவு வளம் இருக்கின்றமையினால் மன்னார் தீவு தேவைப்படுகின்றது. அபிவிருத்தி என்பது மக்களின் தேவைக்காக. அது மக்களையே பாதிக்கின்றது என்றால் அந்த அபிவிருத்தி எதற்கு" என மன்னாரைச் சேர்ந்த ஆர்த்தி கேள்வி எழுப்புகின்றார்.

'உண்மையில் மன்னாரில் இந்த 36 காற்றாடிகளை பூட்டும் போது எங்களுக்கு அது தொடர்பான அறிவு இருக்கவில்லை. நான் உட்பட எல்லாருக்குமே. ஆனால், பொருத்தப்பட்டதன் பின்னர் அதனால் ஏற்படும் பாதிப்புகளை நேரடியாக கண்டு அதனை அனுபவித்தோம். அதற்கு பிறகு தான் இந்த காற்றாலை வேண்டாம் என்ற கோஷத்திற்காக ஆறு வருடங்காக போராடிக்

(14ஆம் பக்கம் பாரக்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூரையில் சோலார்: கனவு வீடும் காசாக்கப்படும் சூரிய ஒளியும்!



நிலாந்தன்

தமிழ் மக்களைப் பொறுத்தவரை வீடு ஒரு குறியீடு. தமிழ்த் தேசிய அரசியலில் பெரிய கட்சியின் சின்னம் அது. அந்த வீடு இப்பொழுது எப்படி இருக்கிறது?
சூரிய மின்கலம்பொருத்தப்பட்டு, அதனாலேயே முகப்புத் தோற்றம் கெட்ட வீட்டைப்போல இருக்கிறதா?

“யாழ்ப்பாணத்தின் பெரிய கல்வீடுகளின் கூரைகளில் சூரிய மின்கலம் பொருத்தப்படுகிறது. பெரும்பாலான வீடுகளில் இந்த சூரிய மின்கலத் தொகுதி வீட்டின் கூரைக்குச் சம்பந்தமே இல்லாமல் பொருத்தமில்லாத ஒரு கடமைப்பாகக் காணப்படுகிறது. இந்த விடயத்தில் யாழ்ப்பாணத்தவர்கள் தமது வீட்டின் முகப்புத் தோற்றத்தின் அழகு கெடுவதைப் பற்றிச் சிந்திப்பதில்லையா?” என்று கேட்டார், யாழ்.பல்கலைக்கழக, விரிவுரையாளர், பேராசிரியர்.சனாதனன்.

சூரிய ஒளி, காற்று போன்றவற்றை மின்சக்தியாக மாற்றும் மீளப் புதுப்பிக்கும் எரிசக்தி திட்டங்கள் உலகம் முழுவதும் பரவலாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த விடயத்தை மக்கள் மத்தியில் பரவலாக்குவது என்பது வரவேற்கத்தக்கது. குறிப்பாக மக்கள் தங்கள் வீட்டின் கூரையில் விழும் ஒளியை அவ்வாறு மின்சக்தியாக மாற்ற வேண்டும் என்று சிந்திப்பது வரவேற்கத்தக்கது. சூழலுக்கு மாசில்லாத நீண்ட கால நோக்கிலான மீளப் புதுப்பிக்கும் எரிசக்தித் திட்டங்களை மக்கள் மயப்படுத்த வேண்டியது அவசியம். அதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. ஆனால் வீட்டின் கூரை என்பது வீட்டின் அழகியல் முழுமையைத் தீர்மானிக்கும் ஒர் அம்சம்.

கூரை எப்படி இருக்க வேண்டும் என்பது வீட்டின் முகப்புத் தோற்றத்தின் அழகியல் முழுமையைத் தீர்மானிக்கின்றது. எனவே வீட்டின் கூரைக்கென்று ஓர் அழகியல் பெறுமதி உண்டு. வீடு கட்டும் பொழுது அதற்கென்று ஒரு கட்டடப் படக் கலைஞரை அணுகினால் கூரைக்குள்ள அழகியல் முக்கியத்துவத்தை அவர் கூறுவார். எனவே வீட்டின் கூரை என்பது மழையிலிருந்தும் வெயிலில் இருந்தும் வீட்டைப் பாதுகாப்பது மட்டுமல்ல. அதற்கென்று ஓர் அழகியல் பெறுமதி உண்டு.

ஆனால் பெருமளவுக்கு படித்த தமிழர்களே அந்த அழகியல் பெறுமதியை விட அதில்

கிடைக்கக்கூடிய லாபம்தான் முக்கியம் என்று சிந்திக்கின்றார்களா?.

கூரையில் சூரிய மின்கலங்களை பொருத்தினால் அதன்மூலம் கிடைக்கும் லாபமானது ஒரு கட்டத்தில் வீட்டின் மின்சார கட்டணத்தை இல்லாமல் செய்கிறது. அடுத்தடுத்த கட்டங்களில் அது மாதாந்த வருமானமாக மாறுகிறது. அதாவது சூரியனைக் காசாக்கலாம். அது நல்லது. ஆனால் காசா? சுற்றுச் சூழலுக்கு நட்பான மின் சக்தியா? வீட்டின் அழகில் தோற்றமா? எது முக்கியம்? அல்லது மூன்றுக்கும் இடையில் சமநிலை காண வேண்டுமா?

படித்த யாழ்ப்பாணத்தவர்கள்கூட வீடுகளைக் கட்டும் பொழுது கட்டிடப் படக் கலைஞர்களை அணுகுவது குறைவு. பெரும்பாலும் வீட்டுக்காரரும் வீட்டைக் கட்டும் ஒப்பந்ததாரரும் அந்த ஒப்பந்ததாரரின் கீழ் வேலை செய்யும் மேசனும்தான் பெருமளவுக்கு கட்டிடப்பட கலைஞரின் வேலையைச் செய்கிறார்கள். அதற்குரிய துறைசார் நிபுணத்துவ அறிவைப் பெறுவதற்கு பெரும்பாலான தமிழர்கள் தயாரில்லை. அதற்கு முதல் காரணம் அவர்களுடைய அழகியல் தரிசனம். இரண்டாவது காரணம் துறை சார் நிபுணத்துவத்தை பெறுவதில் இருக்கக்கூடிய செலவு. பெரும்பாலும் கட்டிடப்பட கலைஞர்கள் வீட்டின் மொத்தக் கட்டுமானத் தொகையில் ஒரு

குறிப்பிட்ட விகிதத்தைச் சம்பளமாகக் கேட்பார்கள். அதைக் கொடுப்பதற்கு ஒரு பகுதி தமிழர்கள் தயாரில்லை. மூன்றாவது காரணம், எதிலும் தொழில் சார் அதையதை அதற்குரிய தொழில்சார் நிபுணத்துவத்திற்கு ஊடாக அணுக வேண்டும் என்ற அறிவியல் விழிப்பின்மை.

இது வீட்டைக் கட்டும் குடிமக்களில் தொடங்கி கட்சிகளை நிர்வகிக்கும் சமூகத்தை நிர்வகிக்கும் அரசியல் கட்சிகள் மற்றும் சமூகத் தலைவர்கள் என்று எல்லாருக்கும் பொருந்தும். இப்படிப்பட்டதோர் சமூகப் பின்னணியில், அண்மை தசாப்தங்களில் தமிழ்ப் பகுதிகளில் வீடுகளைக் கட்டும் புலம்பெயர்ந்த தமிழர்கள் அதற்குரிய துறைசார் நிபுணத்துவத்தைப் பெறுகிறார்கள் என்பது ஆறுதலான விடயங்களில் ஒன்று. குறிப்பாக அவர்கள் வீட்டைக் கட்டும் வேலையை ஒரு ஒப்பந்ததாரரிடம் கொடுக்கிறார்கள். ஒப்பந்ததாரரும் அதற்கு வேண்டிய கட்டிடப்பட வரைபடத்தை அதற்குரிய நிபுணர் ஒருவரிடமிருந்து பெறுகிறார். அதற்குரிய கட்டணத்தை வழங்குகிறார். இப்படிக் கட்டப்பட்ட பல வீடுகள் ஒப்பீட்டளவில்

அழகானவைகளாகவும் நவீனமானவர்களாகவும் எழுந்து வருகின்றன. ஆனால் இவ்வாறு நவீனமாக சிந்தித்து கட்டப்படுகின்ற பல வீடுகளின் கூரைகளில்தான் அண்மை ஆண்டுகளாக அதிகரித்த அளவில் சூரிய மின்கலங்கள் பொருத்தப்படுகின்றன.

சூரிய மின்கலங்களைப் பொருத்தும் பெரும்பாலான வீட்டுச் சொந்தக்காரர்கள் லாபக் கணக்கை மட்டுமே பார்க்கிறார்கள். அதன் மூலம் பசுமை மின்சக்திக்கு தங்கள் பங்களிப்பைச் செய்கிறோம் என்றெல்லாம் எத்தனை பேர் சிந்திக்கிறார்கள்? அதற்கும் அப்பால் தாங்கள் ஒவ்வொரு கல்லாக பார்த்துப் பார்த்துக் கட்டிய வீடு வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு அழகாகத் தோன்ற வேண்டும் என்ற அழகியல் தரிசனம் அவர்களிடமுண்டா? கோடிக்கணக்கான ரூபாய்களை செலவழித்து அழகாக கட்டிய வீடுகளில் வெளித்தோற்றத்தை தலையில் சோலாரை பூட்டுவதன் மூலம் அவர்கள் அழகற்றதாகி விடுகிறார்கள். இந்த விடயத்தில் வீட்டில் அழகிய தோற்றமா? அல்லது அந்த அழகிய தோற்றத்தைக் கெடுக்கும் லாபமா? என்ற கேள்வி வரும் பொழுது பல படித்த தமிழர்களே லாபத்தைத்தான் தெரிவு செய்கிறார்கள்.

இதில் இரண்டையும் இழக்காமல் இரண்டுக்கும் இடையே சமநிலையைப் பேணக்கூடிய விதத்தில் சில வீட்டுக்காரர்கள் முகப்புத் தோற்றத்தில் தெரியாத படிக்கு கூரையில் பின்பக்கத்தில் சூரிய மின்கலத்தைப் பொருத்துகிறார்கள். அல்லது வீட்டின் வெளித் தோற்றத்துக்கு இடைஞ்சலாக இல்லாதபடி சூரிய மின்கலங்கள் பொருத்தப்படுகின்றன. அங்கெல்லாம் எங்கே சூரிய மின்கலங்களை பொருத்துவது என்பதில் திட்டமிட்ட ஒரு இடத் தெரிவு, அழகியல் தெரிவு உண்டு. அந்தத் தெரிவு பெரும்பாலும் வீட்டின் அழகான தோற்றத்தைக் கெடுக்கக் கூடாது என்ற

சிந்தனையில் இருந்து வருகிறது. அதற்கு அந்த வீட்டின் பின்கூரை பெரியதாகவும் இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு வீட்டின் அழகைக் கெடுக்காமல் சூரிய மின்கலங்களைப் பொருத்த வேண்டும் என்று சிந்திப்பவர்கள்

ஒப்பீட்டளவில் குறைவு. மிக அழகாக திட்டமிட்டு செலவழித்து கட்டப்பட்ட வீடுகளின் உச்சியில் அந்த வீட்டின் முகப்பு தோற்றத்திற்கு பொருத்தமே இல்லாத விதத்தில் தட்டையாக இரண்டாவது கூரை போல நிற்கும் சூரிய மின்கலக் கூரை தமிழ் மக்களின் அழகியல் உணர்வைக் கேள்விக்கு உள்ளாக்குகின்றது.

தமது கனவு வீட்டின் அழகை காசுக்காக இழக்கத் தயாராக இருக்கும் ஒரு மனோநிலை என்பது அரசியலும் உட்பட பொதுவாழ்வில் எல்லாவற்றிலுமே தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது. எது கனவோ அதைப் பாதுகாக்க போகின்றோமா? அல்லது எது லாபமோ அதற்காகக் கனவைக் கைவிடப் போகிறோமா? என்பது இங்கு கேள்வி. இது கனவு வீட்டுக்கு மட்டும் பொருந்தாது. கனவு நாட்டுக்கும், அதன் அரசியலுக்கும், ஒரு சமூகத்தின் கூட்டுக் கனவுக்கும் பொருந்தும்.

தமிழரசியலில் ஏற்கனவே கனவுக்கும் யதார்த்தத்திற்கும் இடையிலான இடைவெளி பாரதூரமான விதங்களில் ஆழமாகிக் கொண்டு போகிறது. ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. கனவுக்கும் யதார்த்தத்திற்கும் இடையிலான இடைவெளி தான் செயல் என்று. ஆனால் தமிழ் அரசியலில் செயல் முனைப்புக் குறைந்து கோஷங்களும் வேஷங்களுமே அதிகரித்து வருகின்றன.

தனது கூரையில் விழும் சூரிய ஒளியை எப்படிக் காசாக்கலாம் என்று வாக்காளர்கள்.

சிந்திக்கிறார்கள். அதுபோலவே தனது அரசியலை வைத்து எப்படிச் சம்பாதிக்கலாம் என்று அரசியல்வாதி சிந்திக்கிறார். வீட்டுக் கூரையின் அழகு கெட்டால் அந்த வீட்டுக்காரருக்கு மட்டும்தான் நட்டம். ஆனால் அரசியல் பிழைப்பாக மாறினால் முழுச் சமூகத்திற்கும் தேசத்துக்கும் நட்டம்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை வீடு ஒரு குறியீடு. தமிழ்த் தேசிய அரசியலில் பெரிய கட்சியின் சின்னம் அது. அந்த வீடு இப்பொழுது எப்படி இருக்கிறது? சூரிய மின்கலம்

பொருத்தப்பட்டு, அதனாலேயே முகப்புத் தோற்றம் கெட்ட வீட்டைப்போல இருக்கிறதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலின் கைதினால் ஏற்பட்டிருக்கும் ‘அனுதாப அலை’யை எதிரணிகள் பயன்படுத்துமா?

எம்.என்.எம்.யஸீர் அரபாத்
ஓட்டமாவடி.

இலங்கை அரசியலை கடலலைகளோடு ஒப்பிடுவது மிகத்தகுந்த உவமை. ஒவ்வொரு தேர்தலும் ஒரு புதிய அலை போல எழுந்து, அரசியல் கரையை மாற்றியமைக்கிறது. சில அலைகள் உயர்ந்து பெரும் மாற்றத்தை ஏற்படுத்த, சில அலைகள் கரையை மட்டும் வருடி மறைந்து விடுகின்றன.

இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி என்பன சிறிய, சிறுபான்மைக் கட்சிகளோடு கூட்டிணைந்து ஆட்சியமைத்து வந்திருக்கிறது. இனவாத அலைகளை தோற்றுவித்து ஆட்சியைப்பிடித்ததன் விளைவுகள் தான் இலங்கையில் இன முரண்பாட்டைத்தோற்றுவித்து யுத்த சூழ்நிலைக்கு சென்று பேரழிவுகளைச்சந்திக்க நேர்ந்தது என்பதை யாரும் மறப்பதற்கில்லை.

இவ்வாறான தொடரில் அரசியலில் ஏற்பட்ட அலைகளை நாம் பார்க்கும் போது முன்னாள் பிரதமர் பண்டார நாயக்க குடும்ப அரசியல் முடிவுக்கு வந்து ராஜபக்ஷ குடும்ப அரசியல் ஆரம்பமான காலத்திலிருந்து இதுவரை ஏற்பட்ட அரசியல் அலைகளைப் பார்க்கலாம்.

**மஹிந்த ராஜபக்ஷ காலத்து அலை (2005 - 2015)**

மஹிந்த ராஜபக்ஷவின் எழுச்சி 2005 தேர்தலில் தொடங்கி 2009 இலங்கை யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்ததால் அது போருக்குப்பிந்தைய ‘வெற்றி அலை’யாக இருந்தது. போரை வெற்றி கொண்டு, நாட்டின் பெரும்பான்மை மக்களுக்கு பாதுகாப்பு உணர்வை வழங்கியதால், அந்த அலை வலிமையுடன் எழுந்த போதும், காலப்போக்கில் அதே அலை ஊழல், குடும்ப ஆட்சி, அதிகாரக்குவிப்பு போன்ற பல்வேறு விடயங்களால் மக்கள் மனதில் சோபை இழந்தது.

அதன் விளைவாக கூட்டு எதிரணியினர் ஒன்று சேர்ந்து மஹிந்த அணியிலிருந்த மைத்திரியை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி உள்வாங்கி ஏனைய எதிர்க்கட்சிகளையும் சிவில் சமூக அமைப்புகளையும் ஒன்று சேர்த்து சர்வதிகார குடும்ப ஆட்சிக்கெதிரான மைத்திரி அலையைத் தோற்றுவித்தார்கள்.

**மைத்திரி அலை (2015)**

2015 ஜனாதிபதித்தேர்தலில் மைத்திரிபால சிறி சேனவின் வெற்றி, ஒரு ‘மாற்றத்தின் அலை’யாக மக்களால் பார்க்கப்பட்டது. சிறிய படகில் புயலை எதிர்கொண்டு வந்தவர் போல, எதிர்பாராதவிதமாக மஹிந்தவின் வலிமையான அலைக்குப்பின்பு வெற்றியடைந்தார்.

நல்லாட்சிக்கான எதிர்பார்ப்பு, ஜனநாயக சீர்திருத்தம் போன்ற கனவுகள் அந்த அலையில் மிதந்தன. ஆனால் செயற்பாட்டில் பலவீனமும், அரசியல் உடன்படிக்கைகளில் ஏற்பட்ட சிக்கல்களும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால விற்குமிடையில் ஏற்பட்ட அதிகார மோதல், 52 நாள் அரசியல் குழப்பம் என்பன தளர்வை ஏற்படுத்தின.

இவ்வாறு நல்லாட்சி பலவீனப்படுத்தப்பட்டதால், சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த அரசியலில் ஓரங்கட்டப்பட்ட ராஜபக்ஷ குடும்பத்திற்கு மீண்டும் நல்லதொரு வாய்ப்புக்கிடைத்தது.

**கோட்டாபாயே அலை (2019)**

ஏப்ரல் 21 ஈஸ்டர் குண்டுவெடிப்பு பிந்தைய அச்சமும் பாதுகாப்புத்தேவையை முன்னிலைப்படுத்தி ‘கோட்டா அலையை’ உருவாக்கினார்கள். 2019 இல் கோட்டாபய ராஜபக்ச இனவாதத்தைத்தூண்டி வெற்றி பெற்றார்.

மக்கள் பாதுகாப்புக்காகத் தேடிய வலிமையான அலை என நம்பினார்கள். ஆனால், ஆட்சி நடத்தும் திறமையின்மை, கோவிட்-19 நிர்வகிப்பதில் தோல்வி, பொருளாதாரச்சரிவு ஆகியவை அந்த அலையை மிக வேகமாக பின்வாங்கச்செய்தன. அது கோட்டா அலைக்கெதிரான மக்கள் எதிர்ப்பு அலையாக சுனாமி அலை போல வந்து ஜனாதிபதி கோட்டாபாயவை நாட்டைவிட்டே விரட்டியடித்தது.

ஆட்சியின் மீதி காலத்திற்கு ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தினூடாக ஜனாதிபதியாக தேர்ந்தெடுத்து அன்று ஏற்பட்டிருந்த பொருளாதார சிக்கல்களுக்கு தீர்வுகளைக்கண்டு வரிசை யுகத்தை முடிவுக்கு கொண்டுவந்தாலும், அடுத்த ஜனாதிபதித்தேர்தலில் நாட்டை மீட்ட தலைவர் என ஒரு அலையை ஏற்படுத்தி வெற்றி பெறலாம் என முயற்சித்தாலும் அந்த தேர்தலில் மும்முனைப்போட்டி ஏற்பட்டதாலும், கடந்த ஆட்சியின் போக்கில் மக்கள் அதிருப்தியில் இருந்ததாலும், நெருக்கடியான காலகட்டத்தில் மக்கள் எழுச்சி போராட்டங்களில் அனுர குமாரதிசாநாயக்கவின் பங்கு என்பவற்றோடு, பிரச்சினைகளை மக்கள் மயப்படுத்திய விதம் என்பவற்றால் மக்களிடத்தில் பெரிதும் அனுர குமாரதிசாநாயக்க கவரப்பட்டதால் அநுர அலை தோற்றம் பெற்றது.


இருப்பினும், ஜனாதிபதித்தேர்தலில் அனுரவுக்கு அலை உண்டானதான ஒரு பிரம்மை ஏற்படுத்தப்பட்டாலும் ரணிலுக்கு 22 இலட்சம், சஜீத் 45 இலட்சம், நாமல் 3 இலட்சம் எனை வாக்குப்பிரிப்பு அனுரவுக்கு அலை உருவானதான பிரம்மை உருவாக தோற்றப்பாட்டை உருவாக்கியது எனலாம். மொத்தத்தில் பார்க்கும் போது எதிரணி கணிசமான வாக்கை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், பாராளுமன்ற வெற்றியைத்தொடர்ந்து ஏற்பட்ட தொடர் வெற்றி என்பது அனுரவுக்கான அலை எனக்கொள்ள முடியாவிட்டாலும் மக்கள் மனோநிலையில் எதிரணியினர் மீதான அவநம்பிக்கை, ஒற்றுமையின்மை என்பன அனுரவுக்கான வெற்றியை இலகுபடுத்தியுள்ளதை அவதானிக்கலாம்.

**அநுர அலை (2024)**

ஜனதா விமுக்தி பெரமுன நீண்ட நாள் போராட்டத்தோடு, தேசிய மக்கள் சக்தியாக மக்கள் இயக்கங்களை ஒன்றிணைத்து இடைவிடாத முயற்சியின் பலனாக அனுர அலை எழும்பியது.

அனுரகுமார திஸாநாயக்கா தலைமையிலான ஜனதா விமுக்தி பெரமுனா நீண்ட காலமாக “மாற்றத்தின் புது அலை” என மக்கள் மத்தியில் தோன்றிக் கொண்டி



மக்கள் சுயபரிசோதனை என்பதைத் தாண்டி உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதனால் அரசியல் மாற்றத்துக்கான எண்ணப்பாடுகள் தோற்றம் பெறுவதுடன், மக்கள் சிந்தனைக்கு முக்கியத்துவம் கொடுப்பதை இன, மதவாத அரசியலுக்கும் முக்கியத்துவம் பெற்று இனவாத, மதவாத ஆட்சியாக மாற்றம் பெறுகின்றன.

ருக்கிறது.

இளைஞர்கள், நடுத்தர மக்கள், ஊழல் எதிர்ப்பு மனநிலை கொண்டவர்கள் இவரது அலையில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். தேர்தல் காலங்களில் மக்களுக்கு நம்பிக்கை தரும் வாக்குறுதிகளை அளித்ததன் விளைவாக பாராளுமன்றத்திலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு அதிகமான பிரதிநிதிகளை மக்கள் பெற்றுக் கொடுத்திருக்கிறார்கள்.

ஆனால், இந்த அலை இன்னும் முழுமையாகக் கரையை அடையவில்லை. அது கரையோரத்தில் சேமித்து வைக்கப்பட்ட சக்தி போலத்தொடர்ந்து பெருகிக்கொண்டே இருக்கிறது.

ஆனாலும், ஆட்சியைப்பிடிப்பதற்கு முதல் கடந்த அரசாங்கங்களால் முன்னெடுத்து ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் என்பவற்றை எதிர்த்து கடுமையாக விமர்சனம் செய்து விட்டு, ஆட்சியை பிடித்த பின்னர் அதனைத்தொடர்ந்து முன்னெடுத்துச்செல்வது என்பதும், அதனை மேலும் ஆதரிப்பதென்பதும் ஆட்சியைப் பிடிக்க மக்களை ஏமாற்றிய செயலா? என கேள்விகளும் எழுந்து கொண்டு தான் இருக்கிறது.

கடந்த உள்ளூராட்சி மன்றத்தேர்தலிலும் கணிசமான வாக்குகளை அனுர அரசாங்கம் இழந்திருப்பதும் இது ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்திற்குள் நிகழ்ந்திருப்பதும் அரசாங்கத்தின் போக்கில் மக்களின் அதிருப்தி வெளிப்படுவதாகப் பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், தற்போது இலங்கை அரசியலில் சூடு பிடித்திருக்கும் செய்தி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைது விவகாரமாகும்.

இவ்விவகாரம் ரணில் மீதான அனுதாப அலையை தோற்றுவித்துள்ளதுடன், எதிர்க்கட்சிகள் ஒன்றிணைவை சாத்தியப்படுத்தும் நிலை உருவாக்கியுள்ளது. அத்துடன், எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்கும் சக்தி ரணில் என்ற ஆளுமையிடமே உள்ளதெனலாம்.

அத்துடன், தேசிய மக்கள் சக்தியும் ரணிலைக் கண்டு பயங்கொள்வதைத்தான் குறித்த கைது பின்னணி வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றது. ரணிலை வெளியில் விட்டிருப்பதால் தேசிய மக்கள் சக்திக்கு அச்சுறுத்தலாக அமையும் என்ற ஒரு காரணமும் ரணிலை கைது ஜெயில் வைத்தியசாலை என முடக்க காரணமாக அமைகின்றது.

அத்தோடு, பட்டலந்தைக்கு பழிவாங்க சுமார் 40 ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய நிலையில் இன்று அரச நிதி துஸ்பிரயோகம் என்ற வலைக்குள் சிக்க வைக்கப்பட்டுள்ளார்.

அடுத்து மத்திய வங்கி பிணைமுறி என தொடர் குற்றச்சாட்டுக்களால் ரணிலின் அரசியல் வாழ்வு முடித்து வைக்கப்படும்.

தேசிய மக்கள் சக்திக்குள்ள ஒரே சவால் ரணிலே தவிர வேறு யாருமில்லை. ரணிலைக் கண்டு அச்சங் கொள்வதால் தான் அவரை முடக்கத்திற்கு கொண்டு வர அரசு எத்தனிக்கிறது.

2022ல் பொருளாதார சுனாமி இலங்கையைச் சிதறடித்த போது, அதிர்ச்சி மற்றும் குழப்பத்தின் மத்தியில் ரணில் விக்கிரமசிங்க அரசைப் பொறுப்பேற்றார். பலரால் நிராகரிக்கப்பட்டாலும் நாட்டை நிலை நிறுத்தும் முயற்சியில் வெளிநாட்டுத்தொடர்புகள், கடன் மறுசீரமைப்புகள், தற்காலிக பொருளாதார நிலைத்தன்மை போன்றவையில் குறிப்பிட்டளவு வெற்றி கண்டார். அதன் காரணமாக மக்கள் மத்தியில் தற்போது அவருடைய கைது விடயத்தில் அனுதாப அலை உருவாக்கியுள்ளது.

ஆனால், இது உண்மையான மக்கள் எழுச்சியால் வந்த அலையல்ல. மாறாக, சிதைந்த கடலில் மூழ்காமல் காப்பாற்றும் தற்காலிக அலை போன்றது. இதனை எதிர்க்கட்சிகள் எவ்வாறு பயன்படுத்தப் போகின்றது என்பதில் தான் இதன் வலிமை தங்கியிருக்கிறது.

எதிர்வரும் தேர்தலில் இந்த அலையின் வலிமை சோதிக்கப்படும். அது மக்களின் மனதில் நம்பிக்கை அலையைபாயச் செய்யுமா? அல்லது மக்கள் மீண்டும் மாற்றத்திற்காக அனுர அலையை அல்லது மாற்றத்திற்கான வேறு அலையை தேடுவார்களா? என்ற கேள்வி திறந்த நிலையிலுள்ளது.

இந்த அலை எதிர்கால அரசியலுக்கான அலை என ஒரு சில தரப்பு காட்டிக்கொள்ள முனைந்தாலும் வழக்கு, நீதிமன்றம் என தங்களைத் தற்காத்துக் கொள்வதற்கான கூடாரமாக இதனைப்பயன்படுத்திக் கொள்ள முயல்கின்றனர். என்பது வெளிப்படை.

ரணிலே வழக்கு, நீதிமன்றம் என அலைய விடும் அரசு ஏற்கனவே உள்ள குற்றச்சாட்டு கோவைகளை தூசு தட்டி சங்கிலிக்கோர்வையாக எடுக்கும் போது ஓரணியில் திரள்வதை தடுக்கும் என்பது நிச்சயம்.

இவ்வாறான நிலைமைகளை கருத்திற்கொள்ளும் போது எதிர்காலத்தில் இலங்கை அரசியல் மூன்று சாத்தியமான அலைகளை எதிர்கொள்கிறது:

1. ரணிலின் அனுதாப அலை -

நிலைத்தன்மை, சர்வதேச ஆதரவு என்ற அடிப்படையில் ஒரு குறுகிய கால அலையை நீண்ட அலையாக எதிர்கட்சிகள் மாற்றி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

2. அநுர அலை -

ஊழல் எதிர்ப்பு, இளைஞர் சக்தி, மாற்றம் என்ற அடிப்படையில் வலுவான அலையாக மாற முயற்சிக்கலாம்.

3. பழைய குடும்ப அலைகள் (மஹிந்த - கோட்டா வகை) -

சில பகுதிகளில் இன்னும் நிலைத்து நிற்கலாம், ஆனால், அதன் வலிமை குறைந்துள்ளது. ஆனாலும், நாமலூடாக வலுப்படுத்த முயற்சிக்கலாம்.

எனவே, இலங்கை அரசியலில் ஒவ்வொரு தேர்தலும் ஏதொவொரு அலை ஏற்படுத்துகின்றது. மஹிந்த அலை மக்களை வெற்றிக்குப்பின் கொண்டு சென்றாலும் ஊழலில் கரைந்தது. மைத்திரி அலை நம்பிக்கையைத் தூண்டியும் நீண்டு நிற்கவில்லை கோட்டா அலை பாதுகாப்பின் பெயரில் நாட்டைச் சிதைத்தது. அனுர அலை இன்னும் கரையைக்காண விழைகிறது. தற்போது ரணில் அனுதாப அலை அரசியலில் தற்காலிக அமைதியை வழங்குகிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸியில் ஈரான் தூதவர் நாடுகடத்தல்: விரிசலடையும் இராஜதந்திர முரண்பாடுகள்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

மேற்குலக ஐரோப்பிய நாடுகள் பாலஸ்தீன மக்களின் உரிமைகளை நிலைநாட்ட வேண்டிய கட்டாயத்தில் உள்ள நிலையில், ஆஸி அரசும் தனது பாலஸ்தீன தனயரசு நிலைப்பாட்டை தெளிவாக விளக்கி வருகிறது. ஆயினும் இஸ்ரேலிய அரசின் கடுங் கண்டனத்துக்கும் உள்ளாக வேண்டியுள்ளது.

பாலஸ்தீன தனியரசை அவுஸ்திரேலிய அரசு அங்கீகரித்தன் பின்னர், கடந்த இருவாரங்களில் இஸ்ரேல் - அமெரிக்க அரசுகளால் தொடர் அரசியல் அழுத்தங்களை அவுஸ்திரேலிய அரசு சந்திக்க வேண்டியிருந்தது.

கடந்த 2023 முதல் பாலஸ்தீன - இஸ்ரேல் இடையே போர் தீவிரமாக நடந்து வருகிறது. இந்த போரில் இதுவரை காசாவைச் சேர்ந்த 61 ஆயிரம் பொது மக்கள் உயிரிழந்துள்ளனர். இந்த கோரமான போர் விவகாரத்தில் அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பானீஸ் இஸ்ரேலை கடுமையாக விமர்சித்திருந்தார். மேலும் பாலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரிக்கும் தீர்மானத்தை தெரிவித்திருந்தார். இதற்கு இஸ்ரேல் அரசும் கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தது குறிப்பிடத்தகுந்தது.

இந்நிலையில் இஸ்ரேலிய - அமெரிக்க உளவு அமைப்புகளின் அழுத்தங்களை ஆஸி அரசும் எதிர்கொண்டு வருகிறது. இதன் விளைவாகவே நீண்டகாலமாக ஈரானுடன் வர்த்தக உறவைப் பேணிய ஆஸி அரசு தற்போது, ஈரான் தூதவர் வெளியேற்றுவது மாத்திரமன்றி, விரிசலடையும் இராஜதந்திர முரண்பாடுகளால் இருநாடுகளிலும் தூதுரகங்கள் மூடப்படுகின்றன.

### ஈரான் தூதுவர் வெளியேற்றம் :


ஈரானுக்கு எதிரான முக்கிய காரணங்களில் சிட்னி நகரத்தில் அமைந்திருந்த யூதர்களின் உணவகத்தின் மீது கடந்த வருடம் 2024 ஒக்டோபரிலும், மெல்பேர்ண் நகரத்தில் யூதக் கோயில் மீது கடந்த 2024 டிசம்பரிலும், தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்தத் தாக்குதல்களை, ஈரான் அரசுதான் இயக்கியுள்ளது என்பதற்கு போதுமான ஆதாரங்களை அவுஸ்திரேலியாவின் புலனாய்வுத் துறை திரட்டியுள்ளதாக, பிரதமர் அந்தோனி அல்பானீஸ் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, ஈரானுடனான அனைத்து இராஜதந்திர உறவுகளும் முறிக்கப்படுவதாகவும், அத்துடன், அவுஸ்திரேலியாவுக்கான ஈரானின் தூதர் அஹமது சதேகி கட்டாயமாக வெளியேற்றப்படுவார் எனவும் அவுஸ்திரேலிய அரசு தெரிவித்துள்ளது.

மேலும் ஈரான் நாட்டிலுள்ள அவுஸ்திரேலிய அதிகாரிகள் அனைவரும் தாயகம் திரும்புமாறும் ஆஸி அரசு அறிவித்துள்ளது. இந்நிலையில் நாட்டிலுள்ள அவுஸ்திரேலிய பிரஜைகள் எச்சரிக்கையுடன் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விரிசலடையும் இராஜதந்திர முரண்பாடுகளால் ஈரான் அரசுடனான அனைத்து இராஜதந்திர உறவுகளையும் முறித்துக்கொள்வதாக அவுஸ்திரேலிய அரசு அறிவித்துள்ளது. அத்துடன் ஈரானில் வசிக்கும் அவுஸ்திரேலியர்கள் கைது செய்யப்படலாம் எனவே உடனடியாக வெளியேறுங்கள் எனவும் ஆஸி அரசு எச்சரித்துள்ளது.




ஈரானுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான உறவுகள் ஒருபோதும் எளிதாக இருந்ததில்லை. ஆனால் இப்போது அவை விரிசல் நிலையை எட்டுவது போல் தெரிகிறது. சமீபத்திய ஆண்டுகளில், பயங்கரவாத நடவடிக்கைகளை ஆதரிப்பதாகவும் மனித உரிமைகளை மீறுவதாகவும் குற்றம் சாட்டி, ஈரான் மீது அவுஸ்திரேலியா தடைகளை விதித்துள்ளது. அதிகரித்து வரும் உள்நாட்டு அழுத்தங்களுக்கு மத்தியில், தெஹ்ரானை நோக்கிய தனது உறுதியை நிரூபிக்க அவுஸ்திரேலியாவின் முயற்சியாக தூதரை வெளியேற்றும் முடிவு பார்க்கப்படுகிறது.

ஈரான் தூதரின் வெளியேற்றம், இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலுக்கு அதன் மக்களின் எதிர்வினை குறித்த அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அச்சத்தின் தெளிவான வெளிப்பாடாகும் என்கிறார் தெஹ்ரான் பல்கலைக்கழகத்தின் உலகளாவிய ஆய்வுகள் பேராசிரியர் ஃபோட் இசாடி.

அண்மையில் பாலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டங்கள் சிட்னியில் சாதனை எண்ணிக்கையை எட்டியுள்ளன. அவுஸ்திரேலியாவிலும் பாலஸ்தீன பிரச்சினை ஒரு பரபரப்பான விஷயமாக மாறியுள்ளது என்பது உண்மையாகும்.

புவிசார் அரசியலில் இந்த நெருக்கடி மேற்கத்திய



பாலஸ்தீன தனியரசை அவுஸ்திரேலிய அரசு அங்கீகரித்தன் பின்னர், கடந்த அவுஸ்திரேலிய அரசு சந்திக்க வேண்டியிருந்தது. இதன் இன்னொரு விளைவாகவே ஆஸி அரசு தற்போது, ஈரான் தூதவரை வெளியேற்றுகிறது. அது மாத்திரமன்றி விரிசலடையும் இராஜதந்திர முரண்பாடுகளால் இருநாடுகளிலும் தூதுரகங்கள் மூடப்படுகின்றன.







நாடுகளுக்கும் மத்திய கிழக்குக்கும் இடையிலான உறவுகளை வகைப்படுத்தும் பலவீனமான இயக்கவியலை எடுத்துக்காட்டுகிறது.

அவுஸ்திரேலியா தனது சர்வதேச உறவுகளில் சமநிலையை பராமரிக்க முடியுமா, அல்லது தெஹ்ரானிடமிருந்து ஒரு உறுதியான விலகலை உடனடியாக எதிர்பார்க்க முடியாது.

### புரட்சிகர பாதுகாப்பு படைக்கு தடை :

இன்னுமோர் அதிரடியாக, ஈரானின் புரட்சிகர பாதுகாப்பு படைகளை தீவிரவாத அமைப்பாக அறிவிக்க அவுஸ்திரேலிய பிரதமர் அல்பானீஸ் திட்டமிடுவதாகக் கூறப்படுகிறது. அவுஸ்திரேலியாவில் கடந்த வருடம் இடம்பெற்ற யூத எதிர்ப்பு தாக்குதல் சம்பவங்களின் பின்னணியில் ஈரானின் உளவு அமைப்பு இருந்துள்ளது என்ற தகவல் வெளியாகியுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இரு யூத எதிர்ப்பு தாக்குதல் மற்றும் இஸ்ரேலிய எதிர்ப்பு சம்பவங்களுக்கு ஈரான் காரணமாக இருந்துள்ளமையை அவுஸ்திரேலிய உளவு பிரிவுகள் உறுதி செய்துள்ளன எனவும் பிரதமர் கூறியுள்ளார்.

இதன் காரணமாகவே அவுஸ்திரேலியாவில் உள்ள ஈரான் தூதுவரை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் ஈரானில் உள்ள தூதரக செயற்பாடுகளை அவுஸ்திரேலியா அரசு இடை நிறுத்தவுள்ளது.

அவுஸ்திரேலிய குற்றச்சாட்டுகளும் தெஹ்ரானின் எதிர்வினையும் இருதரப்பு உறவுகளின் சூழல் எதிர்கால வர்த்தக வாய்ப்புகளில் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. ஈரானுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான இராஜதந்திர நெருக்கடி ஒரு முக்கியமான கட்டத்தை எட்டியுள்ளது. பரஸ்பர குற்றச்சாட்டுகள் புவிசார் அரசியலில் தீவிரமான - கடுமையான நடவடிக்கைகளாக [illegible]

இரு நாடுகளிடையே பதற்றம் தெளிவாகத் தெரிகிறது. மேலும் நிகழ்வுகள் விரைவான வேகத்தில் வெளிப்படுகின்றன. இதையெல்லாம் தூண்டியது யார் என்பதை பலரும் புரிந்துகொள்ள மாட்டார்கள். ஏனெனில் இதன் பின்னணியில் இஸ்ரேலிய - அமெரிக்க உளவு அமைப்புகளின் பங்களிப்பு இருக்கிறது என்பது தெளிவாகிறது.

அவுஸ்திரேலியாவில் பல கடுமையான நாசவேலைச் செயல்களுக்கு ஈரான் பொறுப்பு என்றும் கூறப்பட்டதற்கு எதிராக மறுபுறம், ஈரான் சும்மா நிற்கவில்லை. ஈரான் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் எஸ்மாயில் பகாயி ஆஸ்திரேலிய குற்றச்சாட்டுகளை "முற்றிலும் ஆதாரமற்றது" என்று அழைத்தார். இதனை பழிவாங்கும் நடவடிக்கைகள் என அழைத்தார்.

ஏற்கனவே சிக்கலான சூழலில், இந்த நடவடிக்கைகள் அவுஸ்திரேலியாவின் உள் அரசியல் முன்னேற்றங்களால், குறிப்பாக நாட்டில் நடந்த பெரிய பாலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டங்களால் பாதிக்கப்பட்டுள்ளதாக பகாயி பரிந்துரைத்தார்.

ஆனால் அவுஸ்திரேலிய உள்நாட்டு அரசியல் உண்மையில் சர்வதேச உறவுகளில் இவ்வளவு பெரிய தாக்கத்தை ஈரானிய விடயம் வலுவாக ஏற்படுத்த முனைந்துள்ளது.

### 2ம் உலகப்போரின் பின் வெளியேற்றம்:


அவுஸ்திரேலியாவின் பாதுகாப்பு புலனாய்வு அமைப்பு, இஸ்ரேலிய மத நிறுவனங்கள் மீது குறிவைத்து தாக்குதல்களில் ஈரானின் புரட்சிகர காவல்படை ஈடுபட்டதாக தெரிவித்துள்ளது.

இவை அவுஸ்திரேலிய மண்ணில் ஒரு வெளிநாட்டு நாட்டால் திட்டமிடப்பட்ட அசாதாரணமான மற்றும் ஆபத்தான ஆக்கிரமிப்புச் செயல்கள் என்று ஆஸி அரசால் கூறப்படுகிறது.

இதன் விளைவாக ஈரானிய தூதர் அஹ்மத் சடேகி மற்றும் மூன்று தூதரக ஊழியர்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டு உள்ளனர். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அவுஸ்திரேலியா ஒரு வெளிநாட்டு தூதரை வெளியேற்றுவது இதுவே முதல் முறை ஆகும்.

பாலஸ்தீனம் ஐநாவில் முழுமையாக அங்கீகரிக்கப்படும் நிலைக்கு வந்துள்ளது. பல தசாப்த போராட்டங்களின் பின்னர் உலகமெங்கும் பாலஸ்தீன ஆதரவுக் குரல், ஒரு தேச அங்கீகாரமாக மாறி வருகிறது. மேற்குலக வரலாற்றில் பிரான்ஸின் முதல் அங்கீகார நகர்வு பாலஸ்தீன மக்களின் தேசக் கோரிக்கையை மற்றய சர்வதேச நாடுகளும் பின்பற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் அழுத்தம் மேற்குலக நாடுகளின் மேலாக இருந்தாலும், குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் பாலஸ்தீன அங்கீகாரம் வலுப்பெற்று வருகிறது. இஸ்ரேலும் பாலஸ்தீனமும் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என அமெரிக்கா கூறுகிறது. ஆனால் இதன் விளைவாக பாலஸ்தீனம் தனி நாடாவதைத் தடுக்கும் அதிகாரம் இஸ்ரேலுக்கு வழங்கப்படுவதுதான் இறுதியில் மிச்சம் என அரசியல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.




இஸ்ரேலின் காசா மீதான கொடும் போர் மனிதாபிமான கேள்விகளைத் தீவிரமாக உலகெங்கும் எழச் செய்துள்ளது. அண்மையில் பிரான்ஸ் முதல் ஜி 7 நாடாக, ஐநாவில் பாலஸ்தீனத்தை ஒரு நாடாக அங்கீகரிப்போம் எனத் தெரிவித்தது. அதனைத் தொடர்ந்து பிரித்தானியா, அவுஸ்திரேலியா, கனடாவும் இதே முடிவை எடுத்துள்ளது. சீனா, ரஷ்யா ஆகியவை ஏற்கனவே தேசங்களாக அங்கீகரித்துள்ளன.

பாலஸ்தீன தனியரசை அவுஸ்திரேலிய அரசு அங்கீகரித்தன் பின்னர், கடந்த இருவாரங்களில் இஸ்ரேல் - அமெரிக்க அரசுகளால் தொடர் அரசியல் அழுத்தங்களை கன்பரா அரசு சந்திக்க வேண்டியிருந்தது.

இந்நிலையிலேயே இஸ்ரேலிய - அமெரிக்க உளவு அமைப்புகளின் அழுத்தங்களை ஆஸி அரசும் எதிர்கொண்டு வருகிறது. இதன் காரணமாகவே ஈரான் தூதவர் வெளியேற்றுவது மாத்திரமன்றி, இராஜதந்திர முரண்பாடுகளால் இருநாடுகளிலும் தூதுரகங்கள் மூடப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைது செய்யப்பட்ட பிறகு எதிரணிக் கட்சிகளை...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு எதிராக மேற்கொண்டு எடுக்கப்போகும் நடவடிக்கைகளைப் பற்றி அறிவிப்புகளைச் செய்கிறார்கள். விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக நீதிமன்ற வளாகத்துக்கு ஆர்ப்பாட்டக்காரர்களை அணிதிரட்டிக்கொண்டு வந்தவர்களை அடையாளம் காணும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்தாக பொலிஸ்மா அதிபர் கூறியிருக்கிறார்.

சகல குடிமக்களுக்கும் சமத்துவமான முறையில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்திய ஜனாதிபதி திசநாயக்க ஏற்கெனவே எடுக்கப்பட்ட எந்தவொரு நடவடிக்கையும் மீள்பரிசீலனை செய்யப்படமாட்டாது என்று கூறியிருக்கிறார். அரச பணத்தை தவறாக பயன்படுத்தியவர்களிடம் இருந்து அது திரும்பப் பெறப்படும் என்றும் ஊழலுக்கும் துஷ்பிரயோகங்களுக்கும் பொறுப்பானவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்றும் அவர் கொழும்பில் கடந்தவாரம் நிகழ்வொன்றில் கூறினார். செப்டெம்பரில் புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டதும் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட அரசுக்கு சொந்தமான வீடுகள் திரும்பப் பெறப்படும் என்றும் ஜனாதிபதி அறிவித்திருக்கிறார்.

அதேவேளை, விக்கிரமசிங்கவைப் போன்று மற்றைய முன்னாள் ஜனாதிபதிகளும் முறைகேடுகளில் ஈடுபட்டதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றால் அவை குறித்து விசாரணை செய்யப்படும் என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது. சட்டம் சகலருக்கும் சமமான முறையில் பிரயோகிக்கப்படும் என்று கூறிய பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால எவரிடமிருந்தாவது முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றால் மற்றைய முன்னாள் ஜனாதிபதிகளுக்கு எதிராகவும் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று ஊடகங்களுக்கு கடந்த வாரம் கூறினார்.

விக்கிரமசிங்க விவகாரத்தில் முக்கியமான ஒரு அம்சத்தை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. அவர் இலங்கையின் பாரம்பரியமான அரசியல் அதிகார வர்க்கக் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு அரசியல் தலைவர். அவரது கைதும் நீதிமன்றத்தில் அவர் பல மணி நேரமாக அனுபவிக்க வேண்டியிருந்த அசௌகரியங்களும் கொழும்பு உயர் வர்க்கத்தவர்களுக்கு கடுமையான ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஜனாதிபதி திசநாயக்க உட்பட தேசிய மக்கள் சக்தியின் குறிப்பாக, ஜே.வி.பி.யின் தலைவர்களின் எளிமையான குடும்பப் பின்னணிகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது விக்கிரமசிங்கவுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஒரு வர்க்க வன்மம் வெளிக்காட்டப்பட்டதாகவும் விமர்சனங்கள் உண்டு.

விக்கிரமசிங்கவின் அரசியலையும் எதையுமே மெத்தனமாக நோக்கும் அவரது சுபாவத்தையும் விரும்பாதவர்கள் பலர் கூட அவர் கைவிலங்கிடப்பட்டு சிறைச்சாலை வாகனத்தில் கூட்டிச் செல்லப்பட்டதனால் கடுமையான அதிருப்தியடைந்திருக்கிறார்கள் என்பது தெளிவானது. அத்துடன் மனைவியின் பட்டமளிப்பு வைபவத்தில் பங்கேற்பதற்காக (இலங்கையில் இடம்பெற்ற நிதி தொடர்பான பாரிய ஊழல் நடவடிக்கைளுடன் ஒப்பிடும்போது) ஒரு சிறிய தொகையான 16.6 மில்லியன் ரூபாவை பயன்படுத்திதை பாரதூரமான பிரச்சினையாக ஊதிப்பெருப்பித்து அவரை கைதுசெய்திருக்க வேண்டியதில்லை என்ற ஒரு அபிப்பிராயமும் பல மட்டங்களில் இருக்கிறது.

வழமையாக விக்கிரமசிங்கவை மிகவும் கடுமையாக விமர்சித்து வருபவரான முன்னாள் இராஜதந்திரியும் அரசியல் ஆய்வாளருமான கலாநிதி தயான் ஜெயதிலக கடந்த வாரம் எழுதிய கட்டுரை ஒன்றில் ஜனாதிபதி திசாநாயக்கவின் நிருவாகத்தின் உண்மையான முகம் அம்பலப்படுத்தப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். மத்தியவங்கி பிணைமுறி ஊழல் விவகாரத்தை பொறுத்தவரை, சந்தேகத்துக்கு அப்பாற்பட்ட ஒருவராக முன்னாள் ஜனாதிபதியை கருதவில்லை என்று கூறியிருக்கும் தயான், விக்கிரமசிங்க தனது குடும்பத்தவர்களிடம் அல்லது நண்பர்களிடம் கேட்டிருந்தால் ஒரு நிமிடத்தில் பெற்றிருக்கக்கூடிய 16.6 மில்லியன் ரூபாவை அரச நிதியில் இருந்து அவர் கையாடியிருப்பார் என்று நம்பினால் தனது விவேகத்தையே நிந்தனை செய்வதாக அமையும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சட்டபூர்வத் தன்மைக்கும் நியாப்பாடான தன்மைக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை ஜே.வி.பி.ஃ தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் விளங்கிக்கொள்வது சாத்தியமில்லை என்றும் ஒப்பீட்டளவில் வலுவில்லாத ஒரு பிரச்சினைக்காக விக்கிரமசிங்கவை கைது செய்து அசௌகரியத்தை கொடுத்ததன் மூலம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சமூகநீதியில் அதற்கு இருக்கும் பற்றுறுதியை அல்ல, அதன் தலைமைத்துவத்தின் கீழ்த்தரமான சிந்தனையையும் மட்டுமீறிய தவறான உணர்ச்சியார்வத்தையும் வெளிக்காட்டியிருக்கிறது என்றும் தயான் மேலும் கூறியிருக்கிறார்.

இலங்கை அதன் வரலாற்றில் முன்னென்றுமில்லாத பொருளாதார வீழ்ச்சியை சந்தித்தபோது ஆட்சிப் பொறுப்பை அரசியல் தைரியத்துடன் ஏற்றுக்கொண்டு மீட்சிக்கு வழிகாட்டிய ஒரு தலவைரை கைதுசெய்து அவமதித்திருக்கக் கூடாது என்றும் ஒரு பிரிவினர் கவலைப்படுகிறார்கள். 2022 ஜூலையில் வெறுமனே 50 மில்லியன்

டொலர்களாக இருந்த வெளிநாட்டுச் செலாவணி கையிருப்பு 2025 செப்டெம்பரில் 6 பில்லியன் டொலர்களாக உயரக்கூடியதாக நாட்டின் பொருளாதாரத்தை மீடெடுத்த தலைவர் 53, 000 டொலர்களுக்கு (16.6 மில்லியன் ரூபா) வுக்கு பெறுமதி இல்லாதவரா என்று சில தினங்களுக்கு முன்னர் ஒரு அரசியல் பத்தியாளர் தர்மாவேசத்துடன் கேள்வியெழுப்பியிருந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு தேசிய வைத்திய சாலையில் இருந்து வெளியேறியபோது விக்கிரமசிங்க தனது கையில் முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் போறிஸ் ஜோன்சனின் "கட்டவிழ்த்துவிடப்பட்டது" (Unleashed) என்ற தலைப்பிலான சுயசரிதை நூலை கையில் வைத்திருந்தார். தீவிர சிகிச்சைப்பிரிவில் இருந்தபோது அதை அவர் வாசித்திருக்கிறார் போன்று தெரிகிறது. அதன் மூலமாக ஏதாவது அரசியல் செய்தியை நாட்டுக்கு அல்லது அரசாங்கத்துக்கு சொல்வதற்கு அவர் நோக்கம் கொண்டிருந்தாரோ தெரியவில்லை.

போறிஸ் ஜோன்சனின் நூல் பற்றிய தகவல்களை அறியும் ஆவலில் கூகிளில் தேடுதல் நடத்தியபோது அது பற்றி லண்டன் கார்டியன் பத்திரிகையின் இணையாசிரியர் மார்டின் கெற்றில் கடந்த வருட பிற்பகுதியில் எழுதிய விமர்சனத்தை காண நேர்ந்தது."போறிஸ் ஜோன்சனின் நூல் - ஒரு கோமாளியின் வரலாற்றுக் குறிப்புகள்" **(Unleashed by Boris Johnson review - memoirs of a clown)** என்று அதற்கு தலைப்பிடப்பட்டிருந்தது.



# பெருந்தோட்டத் துறையில் உற்பத்தி சார் ஊதிய முறை

## கட்டாயம் தேவை - ஜனாதிபதியின் ஆலோசகர்

கொழும்பு, ஓக. 31

பெருந்தோட்டத் துறையில் உற்பத்தி சார்ந்த ஊதிய முறை கட்டாயம் என்று ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹூலங்கமுவ வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் 175ஆவது ஆண்டு பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

இதில், பெருந்தோட்டத் துறையில் உற்பத்தி சார்ந்த ஊதிய முறைக்கு மாறுவது காலத்தின் கட்டாயம் என சம்மேளனத்தின் தலைவர் சுனில் பொஹொலியத்த வலியுறுத்தினார்.

இந்த பொதுக்கூட்டத்தில் ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அப்போது, தினசரி கூலி முறையிலிருந்து உற்பத்தி சார்ந்த ஊதிய முறைக்கு கட்டாயம் மாற வேண்டும்.

அளவைக் கருத்தில் கொண்டு தோட்டங்களை ஒருங்கிணைக்க வேண்டும்.

2045ஆம் ஆண்டுக்கான காலக்கெடுவை முன்கூட்டியே தெளிவுபடுத்தி, நீண்டகால நடவுகளை மேற்கொள்ள அனுமதி வழங்க வேண்டும்.

இந்தக் கோரிக்கைகள் மூலம், பெருந்தோட்டத் துறையின் எதிர்கால நிலைத்தன்மையை உறுதிப்படுத்த முடியும்.

சுமார் 1. 5 மில்லியன் மக்களின் வாழ்வாதாரத்துக்கும், ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் அந்நியச் செலாவணிக்கும் இத்துறை ஆதரவாக உள்ளது.

இருப்பினும், கடந்த 1992ஆம் ஆண்டிலிருந்து தேயிலை உற்பத்தி சிறிதளவு மட்டுமே உயர்ந்துள்ளது. றப்பர் உற்பத்தி மூன்றில் ஒரு பங்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்தச் சூழலில் பெருந்தோட்டத்துறையின் உற்பத்தித் திறனை அதிகரிக்க பின்வரும் நடவடிக்கைகளை அவர் அறிவுறுத்தினார்:

போட்டியிடும் திறனுள்ள, நிலையான ஊதியத்தை ஏற்றுக்கொள்வது.

இயந்திரமயமாக்கல் மற்றும் நவீன தொழில்நுட்பத்தை விரைவுபடுத்துவது.

பொது-தனியார் கூட்டாண்மைகள் மற்றும் குத்தகை நிலங்கள் மூலம் உற்பத்தியை பன்முகப்படுத்துவது.

மானியங்களை நம்பியிருக்காமல் உற்பத்தித்திறனை ஊக்குவிப்பது.

மேலும், வரவிருக்கும் திட்டங்கள் மற்றும் அரசாங்க நிறுவன சீர்திருத்தங்கள் புதிய முதலீடுகளை ஈர்க்க வாய்ப்புகளை உருவாக்கும் என்றும், பொருளாதாரத்தின் அடிப்படைகளை மேம்படுத்துவதன் மூலமும், வட்டி விகிதங்களைக் குறைப்பதன் மூலமும் புதிய முதலீடுகளை ஊக்குவிக்க முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (எ)

# இரவில் சொந்த வீட்டில் தூங்க...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கின்ற எங்களுடைய பிரஜைகள் குழுவுடன் இணைந்து போராடுகின்றோம்" என ஞானபிரகாசம் மரியசீலன் தெரிவிக்கின்றார்.

மன்னார் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள காற்றாலை திட்டத்தினால் மக்களுக்கு நேரடி பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிவதாக சூழலியலாளர் மேரிநாதன் எடிசன் தெரிவித்தார்.

'காற்றாலை அமைப்பதனாலும், கனிய மண் அகழ்வினாலும் மன்னார் மாவட்டத்தின் மக்களின் வாழ்வாதாரத்திற்கும், வாழ்விடத்திற்கும், சூழலுக்கும் நிறைய பிரச்னைகள் உள்ளன. முதலாவது கட்டமாக மன்னார் மாவட்டத்தில் 30 காற்றாலைகளும், 6 காற்றாலைகள் தீவுக்கு வெளியிலும் அமைக்கப்பட்டுள்ளன. இது எமது தெற்கு கடற்கரையில் தான் அமைக்கப்பட்டிருக்கின்றது. நடுகுடாவிலிருந்து அஞ்சு தென்னம்பிள்ளையடி என்று சொல்வோம். அங்கு வரை தான் இந்த திட்டம் இருக்கின்றது. கூடுதலாக பாதிக்கப்பட்டவர்கள் பேசாலை என்ற பெரிய நகரம். அடுத்தது பறவைகள் வருவதில்லை. வெள்ளப் பெருக்கு வந்ததால் சுகாதார சீர்கேடுகள் ஏற்படும். அதோடு சேர்த்து தொழில் இன்மை, வறுமை இது எல்லாம் சேர்ந்துள்ளது. பறவைகள் வருகின்ற சரியான வழியில் இந்த காற்றாலைகள் அமைக்கப்பட்டுள்ளமையினால் பறவைகளின் வருகையிலும் பிரச்னை இருக்கின்றது. சுற்றுச்சூழலுக்கு பெரிய பாதிப்பு இருக்கின்றது. சுற்றுலாவில் தாக்கம் செலுத்துகின்றது. மக்களின் வாழ்விடத்திலும் நேரடியான தாக்கத்தை செலுத்துகின்றது." என சூழலியலாளர் மேரிநாதன் எடிசன் குறிப்பிடுகின்றார்.

2020-ல் தொடங்கப்பட்ட மன்னார் காற்றாலை திட்டத்தை இலங்கை அரசின் இலங்கை மின்சார சபை செயல்படுத்தியது. அதன்படி, மன்னார் தீவில் 36 காற்றாடிகள் பொருத்தப்பட்டன. அதன் தொடர்ச்சியாக, இத்திட்டத்தை விரிவுபடுத்தும் இரண்டாவது கட்டத்தை இந்தியாவைச் சேர்ந்த அதானி குழுமம் செயல்படுத்தும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்கு எதிர்ப்பு கிளம்பியதால் அதானி குழுமம் இத்திட்டத்தில் இருந்து வெளியேறிவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இதையடுத்து, இரண்டாவது கட்ட மன்னார் காற்றாலை திட்டத்தை உள்நாட்டைச் சேர்ந்த தனியார் பங்களிப்புடன் இலங்கை அரசே செயல்படுத்த முனைந்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள 20 மெகாவோர்ட் மற்றும் முன்மொழியப்பட்ட 50 மெகாவோர்ட் திறன் கொண்ட இரண்டு காற்றாலை மின்சார உற்பத்தி திட்டங்களின் நிர்மாணப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுடன் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு கடந்த 13-ஆம் தேதி சந்தித்ததை அடுத்தே இந்த திட்டங்கள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

மன்னார் பகுதி மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் குறித்து ஆராய்வதற்காக இந்த திட்டம் ஒரு மாதத்திற்கு ஒத்திவைக்கப்படுவதாக இங்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். அந்தக் காலகட்டத்தில், பிரச்னைகளை ஆராய்ந்து விரைவாக தீர்வுகளை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்தார்.

# ரணிலின் கைதினால்....

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், இறுதிக்கேள்வி ஒன்றே. எந்த அலை மக்கள் நம்பிக்கையை நிரந்தரமாகத் தாங்கிச்செல்லும்? அதற்கான விடை வரவிருக்கும் தேர்தலில் மட்டுமே வெளிப்படும்.

மக்கள் மத்தியில் ஏற்படும் கொந்தளிப்பான நிலைதான் அலையாக மாற்றம் பெற்று அரசியல் மாற்றமாக வலுப்பெறுகின்றது. மக்கள் சுயபரிசோதனை என்பதைத் தாண்டி உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதனால் அரசியல் மாற்றத்துக்கான எண்ணப்பாடுகள் தோற்றம் பெறுவதுடன், மக்கள் சிந்தனைக்கு முக்கியத்துவம் கொடுப்பதை இன, மதவாத அரசியலுக்கும் முக்கியத்துவம் பெற்று இனவாத, மதவாத ஆட்சியாக மாற்றம் பெறுகின்றன.

மக்கள் சுய சிந்தனைக்கு முக்கியத்துவம் கொடுக்காமையினால் கடந்த கால அரசியல் மாற்றங்களுக்கு இன, மதவாத சிந்தனை துணை போனது என்பது வரலாறாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்நாட்டு விசாரணை வேண்டாம்...

ஒன்றை ஐ.நாவின் யாழ்ப்பாண அலுவலகத்தில் கையளித்தனர்.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை முற்றாக நிராகரித்து சர்வதேச நீதிப் பொறிமுறையைக் கோருகின்றோம்.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாம், உலகளவில் அதிக எண்ணிக்கையிலான காணாமல் போனவர்களைக் கொண்ட ஒரு நாட்டில் நீதிக்கான எங்கள் போராட்டத்தில் உறுதியாக இருந்து வருகிறோம்.

இந்த சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில், நீதியை நிலைநாட்டுமாறு சர்வதேச சமூகத்தை மீண்டும் ஒருமுறை கேட்டுக்கொள்கிறோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் என்பது உலகளவில் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் முழு மக்களுக்கும் எதிரான ஒரு ஆயுதமாக பயன்படுத்தப்பட்டு வருவதாக ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்துகிறது.

முதலாம் உலகப் போர் மற்றும் இரண்டாம் உலகப் போரின் போது தோன்றிய பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதல்கள் இலங்கை போன்ற நாடுகளில் உள்ள சமூகங்களை இலக்கு வைத்து இன ஒடுக்குமுறையின் கருவியாக மாறியுள்ளன.

பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதல் என்பது மிகவும் நயவஞ்சகமான ஆயுதமாகும், இது முழு சமூகத்திற்கும் நீண்டகால துயரத்தையும் உளவியல் சித்திரவதைகளையும் ஏற்படுத்துகிறது.

ஈழத்தைப் பொறுத்தவரையில், வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் முள்ளிவாய்க்காலில் ஆரம்பிக்கவில்லை. எமது உரிமைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொட்டே இலங்கை அரசானது ஈழத் தமிழ் மக்களுக்கு எதிரான திட்டமிட்ட இன ஒடுக்குமுறைக் கருவியாக இதனை பாவித்து வந்துள்ளனர்.

முள்ளிவாய்க்காலில் உச்சக்கட்டத்தை அடைந்த இலங்கையின் இனப்படுகொலைப் போரின் இறுதிக் கட்டத்தில், 146,679 பேர் கொல்லப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளனர்,

அவர்களது உறவினர்களால் இலங்கை பாதுகாப்புப் படையினரிடம் 21,000 க்கும் மேற்பட்டவர்கள் ஒப்படைக்கப்பட்டு பலவந்தமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்களுக்கு எதிரான இனப் படுகொலையின் ஒரு திட்டமிட்ட தந்திரோபாயமாக இலங்கையால் பலவந்தமாக காணாமல் போகச் செய்தல் நிகழ்த்தப்பட்டுள்ளது. இது அவர்களின் திட்டமிட்ட இன வழிப்புக்கு கணிசமாக பங்களித்துள்ளது,

போரின் இறுதிக் கட்டத்தில், 59 க்கும் மேற்பட்ட குழந்தைகள் இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டனர், பின்னர் வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கும் என்ன நடந்தது என சர்வதேசத்திடம் நீதி வேண்டி தொடர்ந்து போராடி வருகிறோம்.

59 க்கும் மேற்பட்ட சிறுவர்கள் வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்படுவதில் இலங்கை உலகில் முன்னணியில் உள்ளது. சிறுவர் உரிமைகளை நிலைநிறுத்தவும், இனப்படுகொலையை வரையறுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசை திருப்திப்படுத்துவதும் கால அவகாசம் கொடுப்பதும் எமது மக்களுக்கு ஆழ்ந்த வேதனையை அளிக்கின்றது,

தமிழர் உரிமைப் போராட்டத்தின் போது, வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் கொல்லப்பட்டவர்கள் உட்பட சரணடைந்தவர்களின் கதி என்ன என்பதை இலங்கை அரசு வெளிப்படுத்த சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுத்து மிக விரைவாக சர்வதேச விசாரணை ஆரம்பிக்க வேண்டும்.

போர் முடிவடைந்த பின்னர், பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோரின் 350 க்கு மேற்பட்ட உறவினர்கள் நீதிக்காக போராடும் போது, தங்கள் அன்புக்குரியவர்களிற்கு என்ன நடந்தது என அறியாமலே இறந்துள்ளனர்.

இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய மனித புதைகுழி மன்னாரில் உள்ள சதொசா புதைகுழி ஆகும் அங்கு 28 சிறுவர்களின் எலும்புக்கூடுகள் உட்பட 376 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன.

இலங்கையில் இரண்டாவது மனிதப் புதை குழியாக தற்போது அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுவரும் செம்மணி சித்துப்பத்தி இந்துமயான புதைகுழி பதிவாகியுள்ளது குழந்தைகள் உட்பட 169 பேரின் எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழியில் இருந்து 82 மனித உடல்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வுப்பணி நிறைவடைந்த நேரத்தில் 52 நபர்களின் எச்சங்கள் மீட்கப்பட்டன.

மேற்படி புதைகுழி எவையும் விசாரிக்கப்படவில்லை அத்துடன் எமது தாயகத்தின் ஏனைய வடக்கு கிழக்கு பிரதேசங்களில் சிங்கள இராணுவம் மற்றும் சிங்கள காடையாளர்களால் எம் உறவுகள் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டதாக அடையாளப்படுத்தப்படும் இடங்களும் அகழ்வுப்பணி நடைபெற வேண்டும் எனவே சர்வதேச சுயாதீன விசாரணைக் குழுவை நியமிக்க வேண்டும் என ஐ நா மன்றத்தை கோருகின்றோம்.

இலங்கை தொடர்பாக கடந்த ஓகஸ்ட் 8ஆம் திகதி A/HRC/60/21 இலக்கமிட்ட தங்களது அறிக்கை இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சில அடிப்படை பிரச்னைகளை குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் நீங்கள் இதுவரை இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, குற்றவாளிகள் , தண்டனைக்கு உட்படுத்தப்படாமல் கடந்த காலங்களில் இடம்பெற்ற கடுமையான மனித உரிமை மீறல்கள் உள்ளிட்ட சர்வதேச போர் குற்றங்களுக்கு நீண்ட காலமாக தாமதித்து வந்த நீதியையும் பொறுப்புகூறலை உறுதிசெய்யவும் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு கிடைத்த வரலாற்று வாய்ப்பை பயன்படுத்தி கொள்ளுமாறு இலங்கை அரசுக்கு இராஜதந்திர அடிப்படையில் நீங்கள் அழைப்புவிடுத்துள்ளீர்கள்.

பொறுப்புக்கூறல் தொடர்பான தங்களது மேற்படி கருத்து கடந்த 76 ஆண்டுகளாக அரசினால் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டு தொடர்ந்தும் கட்டமைப்புசார் இனவழிப்புக்கு முகம் கொடுத்தவாறு சர்வதேச நீதிக்காக காத்திருக்கும் தமிழ் மக்களாகிய எமக்கு பாரிய ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

வருகின்ற 8ம் திகதி செம்ரெம்பர் மாதம் தொடங்கவுள்ள ஐ.நா மனித உரிமைக் கூட்டத்தொடரில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் உரியவர்களுக்கு சர்வதேச நீதிப் பொறிமுறை ஊடாக உண்மை கண்டறியப்பட்ட பதில் விரைந்து வழங்குவதுடன்,பாதிக்கப்பட்டோரின் சாட்சியங்களை பாதுகாக்க ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் .

திட்டமிட்ட இனப்படுகொலை மேற்கொண்ட இலங்கை அரசை சர்வதேச நீதிமன்றத்திடம் பாரப்படுத்தி விசாரணை ஆரம்பிக்க தீர்மானம் நிறைவேற்ற ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரையும் உறுப்பு நாடுகளையும் கோருகின்றோம்.

நீண்டகாலமாக பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு நீதியை வழங்குவதற்காக சர்வதேச பொறிமுறைகளின் ஊடாகவும் தீர்க்கமான நடவடிக்கைகளை விரைந்து எடுக்குமாறு சர்வதேச சமூகத்தை கேட்டுக்கொள்கிறோம்.

போர் முடிவடைந்து 16 வருடங்களாக நீதி கோரியும் பின் இன்றுடன் 3114 நாட்கள் தொடர்ச்சியாக வீதிப் போராட்டங்களை முன்னெடுத்து வருகிறோம் எமது போராட்டத்தை இலங்கை அரசால் அடக்க முடியாது. இன்று, எங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையைத் தேடுவதற்கும் இனப்படுகொலைக்கான நீதியை சர்வதேச பொறிமுறைகள் மூலம் தேடுகின்ற எங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறோம் - என்றுள்ளது. (அ)

## ஜெனீவா...

அதன்படி, கொழும்பு 08, கோட்டே வீதியில் உள்ள என்.எம்.பெரேரா மண்டபத்தில் இது தொடர்பான நிகழ்ச்சி ஒன்று நேற்று முன் தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பொது கையொப்பப் பிரசாரத்தின் தொடக்க விழாவில் தேஹிபே சந்திர விமல தேரர், பலாங்கொட ரத்னபிரிய தேரர், அட்மிரல் (ஓய்வு) டி.கே.பி. தசநாயக்க, அட்மிரல் (ஓய்வு) சரத் வீரசேகர, மேஜர் ஜெனரல் சாகி கல்லகே, மேஜர் ஜெனரல் சேனவடுகே, வைத்தியர் வசந்த பண்டார, யசஸ்தா ராமதாச, சட்டத்தரணி நுவன் பெல்லந்துடுவ, முன்னாள் சுங்க பணிப்பாளர் எஸ். கே.எஸ்.ஏ.சேனநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த பொது மனுவில் கையொப்பமிடுவதற்கு நாளை கொழும்பு கோட்டையிலும் கண்டி, குருநாகல், களுத்துறை, சிலாபம், கம்பஹா, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி உள்ளிட்ட முக்கிய நகரங்களிலும் பொதுமக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. (அ)

## யாழில்...

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். சாட்சிகளை வட்டுக்கோட்டை பொலிஸார் நெறிப்படுத்தினர். உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

## சஜித்துடன்...

சஜித் பிரேமதாஸ மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களும் தனக்காக எடுத்த நடவடிக்கைகளுக்கு ரணில் சஜித் துக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இந்த செயல்முறையை இத்தோடு நிறுத்தி விடா மல், தொடர்வதாக சஜித் பிரேமதாஸவிடம் ரணில் கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நான் சில நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற வேண்டியிருக்கும். அதன் பிறகு, நான் அனைத்துத் தலைவர்களையும் சந்திப்பேன் என்று ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## வலிந்து...

நடத்தப்பட்டு நீதி வழங்கப்பட வேண்டும்." - என்று அவர்கள் இதன் போது வலியுறுத்தினர்.

இந்தப் போராட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள ஒட்டுமொத்த தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

வடக்கின் அனைத்து மாவட்டங்களிலும் கிழக்கு மாகாணத்திலும் நேற்று பெரும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. (அ)

## பிரிட்டன்...

பிரதமர் அலுவலகம் வரைக்கும் பேரணியாக சென்ற புலம்பெயர் தமிழ் உறவுகள் கோசங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புலம்பெயர் தமிழர்களால் செம்மணிக்கு நீதி கோரியும் இனவழிப்பு அரசாங்கத்திற்கு தண்டனை வழங்கக் கோரியும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் பெருந்திரளான புலம்பெயர் தமிழர்கள் கலந்து கொண்டு இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான தமது எதிர்ப்பை முன் வைத்திருந்தனர். (அ)

## மாகாணத்...

வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மஹீம் இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாகாண சபைத் தேர்தல்கள் காலம் தாழ்த்தப்பட்டமைக்கான பொறுப்பினை நல்லாட்சி அரசாங்கமே ஏற்க வேண்டும். வெகு விரைவில் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் சகல அரசியல் கட்சிகளும் தமது நிலைப்பாடுகளை அறிவிக்க வேண்டும்.

மாகாணசபைத் தேர்தல் முறைமை தொடர்பில் பாராளுமன்றத்திலேயே திருத்தங்கள் முன்வைக்கப்பட வேண்டும். பழைய முறைமையில் தேர்தலை நடத்துவதா அல்லது திருத்தப்பட்ட கலப்பு முறைமையில் தேர்தலை நடத்துவதா என்பதை பாராளுமன்றமே தீர்மானிக்க வேண்டும்.

ஆனால் 2017இல் ஆட்சியிலிருந்த அரசாங்கத்துக்கோ 2019இல் ஆட்சியிலிருந்த அரசாங்கத்துக்கோ வழங்கிய ஆணையை விட தற்போதுள்ள அரசாங்கத்துக்கு அதிக பெரும்பான்மையுடனான ஆணையை வழங்கியிருக்கின்றனர்.

எனவே, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடமும், பிரதமர் ஹரிணி அமரசூரியவிடமும் குறிப்பாக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரிடமும் மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அல்லது மாகாணசபை முறைமையை நீக்கும் நிலைப்பாட்டில் இருந்தால் அதனையாவது மக்களிடம் கூறுமாறு வலியுறுத்துகின்றோம். ஒரு மாதத்துக்கு முன்னர் எமது அமைப்பினால் மாகாண சபை தொடர்பில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்னும் அதற்கு எவ்வித பதிலும் இல்லை.

அதேவேளை அரசியல் கட்சிகளுக்கும் தாம் எதிர்க்கட்சிலிருக்கும் போது மாத்திரமே மாகாணசபைத் தேர்தல் நினைவுக்கு வருகிறது. ஆனால் அவர்கள் ஆட்சியமைக்கும் போது அதனை மறந்து விடுகின்றனர்-என்றார். (அ)

## காணாமல்...

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மற்றும் தென்னிலங்கையின் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களும் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்பட்டது. இதன்போது வடக்கு கிழக்கில் இருந்து வருகை தந்திருந்த பல்வேறு தரப்பினரும் தங்களது கருத்துகளை முன்வைத்திருந்தனர்.

அத்துடன் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடித்தருமாறு பல்வேறு கோரிக்கைகளைத் தாம் முன்வைத்துள்ளதாகத் தென்னிலங்கையில் இருந்து வருகை தந்திருந்தவர்கள் தெரிவித்திருந்தனர்.

அத்துடன் பிரதமர் செயலகத்தில் கடிதமொன்றையும் சமர்ப்பிக்கவுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

## கறுப்பு ஜூலை கற்காத பாடங்கள் நூல் வெளியீடு இன்று கொழும்பில்




யாழ்ப்பாணம், ஓக. 31

முனைவர் ஞாலசீர்த்தி மீநிலங்கோ எழுதிய 'கறுப்பு ஜூலை கற்காத பாடங்கள்' நூல் வெளியீடும் கலந்துரையாடலும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் சக்கரப்பிள்ளை மண்டபத்தில் சட்டத்தரணி மகிழினி ஜெகதீஸ்வரன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

நூல் அறிமுகவுரையை வங்கியாளர் த.வி. ரெஷாங்கனும் ஆய்வுரையை சட்டத்தரணி என்.கே. அசோக்பரனும் நிகழ்த்துவர்.

மனிதவள முகாமையாளர் ரக்சானா ஷரிபுத்தீனின் நெறியாள்கையில் உரையாடல் களத்தில் முஸ்லிம்கள் பார்வையில் முனைவர் மொஹிடீன் அலிகானும் மலையகத் தமிழர் பார்வையில் முனைவர் எம்.எம். ஜெயசீலனும் ஈழத்தமிழர் பார்வையில் பொறியியலாளர் சண் சுதாகரும் சிங்களவர் பார்வையில் சட்டத்தரணி இரா. இரஞ்சனும் உரையாற்றுவர். (அ)

## வவுனியா நகர் கடையில் தீ!

வவுனியா, ஓக. 31

வவுனியா நகரில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் ஏற்பட்ட தீப்பரவல், கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

நேற்று மதியம், முதலாம் குறுக்குத் தெருவில் உள்ள, விவசாய உபகரணங்கள் விற்பனை செய்யும் கடையின் மேல் மாடியில் இருந்த களஞ்சியத்தில், திடீரென தீப்பரவல் ஏற்பட்டது.

அதனையடுத்து, கடை உரிமையாளரால், வவுனியா பொலிஸார் மற்றும் வவுனியா மாநகர சபையின் தீயணைப்பு பிரிவுக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு பிரிவினரும், வவுனியா பொலிஸாரும் இணைந்து, பல மணி நேர போராட்டத்தின் பின்னர், தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

எனினும், ஒரு தொகுதி விவசாய உபகரணங்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. இந்த நிலையில், வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

## காணாமல்போனோர் குறித்து மீண்டும் விசாரணை நடக்கும்!

### நீதி அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 31

2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கு மற்றும் கிழக் கில் பதிவான 10,000 இற்கும் மேற்பட்ட காணாமல் போனோர் குறித்த முறைப்பாடுகளின் விசாரணைகள் மீண்டும் தொடங்கப்படும் என்று நீதி அமைச்சர் ஹர்ஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

காணாமல்போனோர் அலுவலகம் மற்றும் இழப்பீட்டு அலுவலகம் ஆகியவற்றிற்கு புதிய வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்படும் என்றும் கூறிய அவர், இந்த விசாரணைகளைத் தொடங்க அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாகவும், மதிப்பிடப்பட்டு ஒதுக்கீடாக 375 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

காணாமல்போனோர் அலுவலகத்தால் அலரி மாளிகையில் நேற்று முன் தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வலிந்து காணாமல் போனோர் தின நிகழ்வில் உரையாற்றும் போது அமைச்சர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவளிக்க ஒரு விரிவான இழப்பீட்டு முறை செயல்படுத்தப்படும். பாரபட்சமற்ற நீதியை உறுதி செய்வதற்கான ஒரு புதிய சட்ட கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்படும்.

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான நிர்வாகத்தின் கீழ் அரசாங்கக் கொள்கையில் உண்மை, நீதி மற்றும் இழப்பீடுகள் மையமாக இருக்கும் - என்றார். (அ)

# அடக்குமுறையை உடன் அரசு கைவிடவேண்டும்!

### ஜோசப் ஸ்டாலின் வலியுறுத்து



கொழும்பு, ஓக. 31

**அடக்குமுறை மற்றும் தனியார்மயமாக்கலை அரசாங்கம் உடனடியாக நிறுத்தவேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

**இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 68ஆவது வருடாந்த பொது மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அடக்குமுறை மற்றும் தனியார்மயமாக்கலை மேற்கொள்ளவா இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

அதேநேரம், கல்வி சீர்திருத்தங்களை உடனே இந்த அரசாங்கத்திற்கு செய்ய முடியாது.

விவாதங்களை மேற்கொண்ட பின்னரே அவற்றை மேற்கொள்ள வேண்டும். நாங்கள் அதற்குத் தயாராக இல்லை.

கட்டண மாபியாவிலிருந்து பாடசாலை கல்வியை விடுவிக்க வேண்டும். எந்தவொரு அரசாங்கத்திற்கு 5 ஆண்டுகள் மாத்திரமே ஆட்சியமைக்க முடியும்.

மக்கள் போராட்டம் செய்தால், அவர்கள் வீட்டிற்குச் செல்ல வேண்டி நிலை ஏற்படும்.

நாங்கள் ஓர் அரசியல் கட்சி அல்ல தொழிற்சங்கம் - என்றார். (அ)

## ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் தலைவர் ஜனாதிபதியின் செயலாளருடன் சந்திப்பு

கொழும்பு, ஓக. 31

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள, ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் தலைவர் பிரான்சுவா வெலரியனுக்கும், ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்கவுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பு நேற்று முன் தினம் பிற்பகல், ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

அரச மற்றும் தனியார் துறைகளில் ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கான அரசாங்கத்தின் தொடர்ச்சியான முயற்சிகளை விளக்கியஜனாதிபதியின் செயலாளர், ஊழல் எதிர்ப்பு இயந்திரத்தை வலுப்படுத்த, அரசாங்கம் பல புதிய திட்டங்களை ஆரம்பித்துள்ளதாகவும், அவை ஏற்கனவே குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை காட்டியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழித்தல், அரச நிதியை திறம்பட பயன்படுத்துவதை உறுதி செய்தல் மற்றும் நாட்டில் சிறந்த கலாசாரத்தை உருவாக்குதல் ஆகிய பரந்த நோக்கங்களுடன், இலஞ்சம் மற்றும் ஊழல் குறித்து, பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டங்களும் செயற்படுத்தப்பட்டுள்ளதாக, ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்தார்.

இலஞ்சம் மற்றும் ஊழலை தடுக்க, அரச நிறுவனங்களுக்குள் உள் விவகாரப் பிரிவுகளை நிறுவுவதையும், கிளீன் சிறிலங்கா திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளையும் பாராட்டிய, ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் அமைப்பின் தலைவர், ஊழல் எதிர்ப்பு இலக்குகளை முன்னேற்றுவதில், அரசாங்கமும் சிவில் சமூகமும் இணைந்து செயற்படுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

அத்துடன், இலங்கையின் ஊழல் எதிர்ப்புத் திட்டத்திற்கு தொடர்ந்து ஆதரவளிக்கவுள்ளதாகவும், ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் அமைப்பின் தலைவர் குறிப்பிட்டார். (அ)

## வடக்கு பெண் நோயியல் வைத்தியசாலை; இளங்குமரன் எம்.பி. பொலிஸில் முறையீடு

யாழ்ப்பாணம், ஓக. 31

வடக்கு மாகாண பெண் நோயியல் மருத்துவமனையை இயங்கவிடாது மூடும் முயற்சியை எதிர்த்து நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டமைக்கு எதிராக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில், முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை நோயாளர் நலம்புரிச் சங்கத்தினால் போராட்டம் நடத்தப்பட்டமையைக் கண்டித்தும், மக்களை தவறான முறையில் வழிநடத்துகின்றனர் என்பதை கருத்திற்கொண்டும், இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ)

## 10 மில்லியனுக்கும் மேற்பட்ட அஞ்சல் பொருட்கள் தேங்கம்

கொழும்பு, ஓக. 31

தினமும் மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலையத்தில் 10 மில்லியனுக்கும் மேற்பட்ட அஞ்சல் பொருட்கள் தேங்கி இருப்பதாகவும் தினமும் 2 மில்லியன் கடிதங்கள் சேகரிக்கப்படுவதாகவும் ஒன்றிணைந்த அஞ்சல் தொழிற்சங்க முன்னணியின் இணை ஒருங்கிணைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.

மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலையத்தில் கைரேகை இயந்திரங்கள் செயல்படுத்தப்பட்டதன் மூலம் அஞ்சல் ஊழியர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவு நிறுத்தப்பட்டதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.


அஞ்சல் ஊழியர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவை வழங்க ஒரு சிறப்புக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அந்தக் குழு இன்னும் தகவல்களைச் சேகரித்து வருகிறது.

அடுத்த மாதம் 4 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அஞ்சல் மாஅதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

தினமும் 2 மில்லியன் கடிதங்கள் சேகரிக்கப்படுவதால், அடுத்த மாதம் 4 ஆம் திகதி அறிக்கை கிடைத்தால், அந்த திகதிக்குள் சேகரிக்கப்பட்ட கடிதங்களின் எண்ணிக்கை சுமார் 16 மில்லியனாக இருக்கும் எனவும் அவர் கூறினார். (அ)

## 6ஆம் திகதி விசேட அறிக்கை வெளியிடுகின்றார் ரணில்!



கொழும்பு, ஓக. 31

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர் வரும் 6 ஆம் திகதி விசேட அறிக்கையொன்றை வெளி யிடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அன்றைய தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் 79 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் ரணில் விக்கிரமசிங்க இந்த அறிக்கையை வெளியிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஏனைய உறுப்பினர்களுடன் கலந்துரையாடி வருவதாகவும், தற்போது நாடு எதிர்நோக்கும் சவால்கள் உள்ளிட்ட பல விடயங்கள் இந்த விசேட அறிக்கையில் உள்ளடக்கப்பட உள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 31.08.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org